விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 09 திங்கட்கிழமை (25.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# என்னிடம் பேசித் தீர்க்காது எங்கு போனாலும் பயனில்லை

## த.தே.கூட்டமைப்பிடம் தெரிவித்தாராம் மகிந்த



**(கொழும்பு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் புதுடில்லி விஜயம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பிரதிநிதி ஒருவர் மூலமாக சம்பந்தனிடம் தனது அதிருப்தியை வெளியிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடில்லி விஜயம் குறித்து அரசாங்கத்துக்கு தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும், இது குறித்து தான் ஏமாற்றம் அடைந்திருப்பதாகவும் ஜனாதிபதி தனது பிரதிநிதி ஊடாக சம்பந்தனுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடில்லிப் பயணம் தன்னையும் அரசாங்கத்தையும் நெருக்கடிக்குள் தள்ளுவதை நோக்கமாகக் கொண்டது எனவும், அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான முறுகல் நிலைக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளுநரை மாற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை மாகாண சபையில் நிறைவேற்றியதாலேயே தான் ஆளுநரை மாற்றவில்லை எனவும், சம்பந்தனும் அவரது கட்சியினரும் எங்கு சென்றாலும் அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கு இறுதியில் தன்னிடமே வரவேண்டும் என்றும் அவர் தன்னுடைய பிரதிநிதி ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதியின் இந்த மிரட்டலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஏற்கவில்லை என்றும் இத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான் தமிழ் கட்சி ஒன்றின் தலைவர். நாங்கள் அரசியல் தீர்வு ஒன்றுக்காகப் பாடுபடுகிறோம். இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காக நாங்கள் அங்கு செல்கிறோம் என்று ஜனாதிபதியின் பிரதிநிதியிடம் சம்பந்தன் நேரடியாகவே தெரிவித்ததாக இத்தகவல்கள் மேலும் 20ஆம் பக்கம் பார்க்க....


## மத அமைப்புகளுடன் மோதாதீர்கள் - ஜனாதிபதி

(கொழும்பு)

மத அமைப்புக்களுடன் மோத வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மத அமைப்புக்களுடன் அமைச்சர்கள் மோதுவதனை தவிர்த்துக்கொள்ள 20ஆம் பக்கம் பார்க்க....

## மோடியுடன் கூட்டமைப்பு பேச்சு; அமைச்சர் வாசுதேவ அதிருப்தி



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை தொடர்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அதிருப்தி வெளியிட்டுள்ளார். 20ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பின் இந்திய விஜயத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்!

### அரச பங்காளிக் கட்சிகள் விசனம்

(கொழும்பு)

பாராளுமன்ற வெளிவிவகார குழுவுக்கு அறிவிக்காமலும் அந்த குழுவின் அனுமதியின்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு சென்றது எவ்வாறு என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரபூர்வமாக வெளிநாடுகளுக்குச் செல்வதானால் சபாநாயகரின் அனுமதியுடன் பாராளுமன்ற வெளிவிவகாரக் குழு அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். ஆனால தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அவ்வாறு எந்த ஏற்பாடுகளும் இன்றி இலங்கை அரசாங்கத்தின் இறைமைக்கு எதிராக இந்தியாவில் கருத்துக் கூறியுள்ளதாக ஹெல உறுமயவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் உட்பட 20ஆம் பக்கம் பார்க்க....

## உலகின் மோசமான மனிதர்கள் ; 13-வது இடத்தில் மகிந்த!

### ரேங்கர் இணையத்தளம் கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

வரலாற்றுக் காலம் தொட்டு தற்போது வரையான காலகட்டத்தில் மிகவும் மோசமான மனிதர்களின் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13-வது இடத்தில் இடம்பெற்றுள்ளார்.

உலகின் மோசமான மனிதர்கள் தொடர்பில் ரேங்கர் என்ற இணையத்தளம் நடத்திவரும் கருத்துக் கணிப்பில் பலர் ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர்.

இக்கருத்துக் கணிப்பின்படி உலகின் மோசமான மனிதர்கள் தொடர்பிலான பட்டியலில் ரஷ்யாவின் மறைந்த தலைவர் ஜோசப் ஸ்டாலின் முதலிடத்திலும், ஜேர்மனியின் மறைந்த சர்வாதிகாரி அடேல் ஹிட்லர் 2-வது இடத்திலும் இடம்பெற்றுள்ளனர்.

அதேபோன்று சர்வாதிகாரி போல்பாட் 3-வது இடத்திலும், இடி அமீன் 4வது இடத்திலும், ஒசாமா பின்லாடன் 5வது இடத்திலும், மாவோ சேதுங் 6-வது இடத்திலும், வடகொரியாவின் கிம் ஜோங் இல் 7-வது இடத்திலும் தற்போது இருக்கின்றனர்.

அத்துடன், ஹெய்ன்ரிச் ஹிமளர் 8-வது இடத்திலும், சதாம் ஹுசைன் 9-வது இடத்திலும், பெனிட்டோ முசோலினி 10-வது இடத்திலும் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில் உலகின் மோசமான மனிதர் 20ஆம் பக்கம் பார்க்க....

## கைக்குண்டு மீட்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.புலோப்பளை மேற்குப் பகுதியிலுள்ள தனியார் காணியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து எம்-75 கைக்குண்டொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு மீட்கப்பட்டதாக பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கிணற்றை துப்புரவு செய்வதற்கு உரிமையாளர், கிணற்றை பார்த்தபோது கிணற்றுக்குள் கைக்குண்டு இருப்பதனை கண்ணுற்று பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினருடன் பொலிஸார் சென்று மேற்படி கைக்குண்டை பாதுகாப்பாக மீட்டுள்ளனர். (செ-6)

**வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க் கந்த சுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக இடம் பெற்றது. பலஇலட்சக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் நல்லூர்க் கந்தன் தேரில் வீதி [illegible]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பல்கள் வழங்க ஜப்பான் ஆராய்வு

இலங்கை அதன் கடலோர கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு உதவியாக கண்காணிப்பு கப்பல்களை வழங்குவது குறித்து ஜப்பான் ஆராய்ந்து வருகிறது என்று அந்நாட்டு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இது குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஜப்பானிலிருந்து மத்திய கிழக்கிற்கு செல்லும் எண்ணெய்க் கப்பல்கள் இந்து சமுத்திர கடற்பாதையூடாகவே செல்கின்றன என்றும் அவற்றின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்தக் கண்காணிப்புக் கப்பல்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன என்றும் தெரியவருகிறது.

ஜப்பானியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் பின்னரே எத்தனை கப்பல்களை வழங்குவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்துள்ள ஜப்பானிய அதிகாரிகள், புதிதாக கட்டப்பட்ட கப்பல்களை வழங்குவதா அல்லது பயன்படுத்தப்பட்ட கப்பல்களை வழங்குவதா என்பது குறித்து இரு நாட்டு அதிகாரிகளும் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (செ-6)

# இலங்கையில் சுமார் 50 ஆயிரம் போதைப் பொருள் பாவனையாளர்கள்

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் அளவில் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஐ.நாவின் இரண்டு பிரகடனங்களில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை, அதன்படி தொடர்ந்து ஐ.நாவுடன் இணைந்து செயற்பட்டுவருவதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை இயக்குநர் கே. கமகே தெரிவித்தார்.

இதன்படி, இலங்கைக்குள் வருகின்ற வர்த்தக சரக்கு கொள்கலன்களில் தேடுதல் நடத்தும் சிறப்பு வேலைத்திட்டமொன்றை இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுவருவதாகவும் அவர் கூறினார்.




இதனிடையே, இந்திய- இலங்கை பொலிஸாரின் போதைப்பொருள் ஒழிப்பு அதிகாரிகளிடையே அண்மையில் புதிய இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பொலிஸ் டிஐஜி பூஜித் ஜயசுந்தர, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் இயக்குநர் எஸ்எஸ்பி கமல் சில்வா ஆகிய அதிகாரிகள், இந்திய போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் தலைவர்களையும் தென்னிந்தியப் பிராந்தியத் தலைவர்களையும் சந்தித்து அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை உடனடியாகப் பரிமாறிக் கொள்வது, கடல்மார்க்கமாக போதைப் பொருட்கள் கடத்தப்படும்போது அது தொடர்பில் இருநாட்டு அதிகாரிகளிடையே ஒத்துழைப்புகளை பரிமாறிக்கொள்வது, கடத்தல்காரர்கள் நாடு விட்டு நாடு தாவும்போது அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பது ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் இருநாட்டு அதிகாரிகளும் உடன்பாடு கண்டுள்ளனர்.

குறிப்பாக கேரளா, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய பிராந்தியங்கள் ஊடாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படும்போது இருநாட்டு அதிகாரிகளும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பிலேயே இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் ஊடகப் பேச்சாளர எஸ்.எஸ்.பி அஜித் ரோகண கூறினார். (செ-6)



மண்டைதீவில் காபெற் வீதி அமைக்கும் பணி நடைபெற்று வருவதை படத்தில் காணலாம். படம்: செல்வன்

# இலங்கையின் ஆட்சிமுறை மாற்றப்பட வேண்டும்

## புத்திஜீவிகள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய ஆட்சிமுறை மாற்றப்பட வேண்டும் என்று பல புத்திஜீவிகளும், கலைஞர்களும் சமூக நடவடிக்கையாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கலாநிதி தர்மதாஸ பத்திராஜா, கலைஞர் தர்மஸ்ரீ பண்டாரநாயக்க, உட்பட்டவர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அபிவிருத்தி என்ற பெயரில் பாரிய கடன்களை பெற்று மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பொதுமக்கள் மீது பாரிய கடன்சுமையை ஏற்படுத்துகின்றன. இது நாட்டின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும்.

தற்போதைய நிலையில் இனங்களுக்கு இடையிலும் மதங்களுக்கு இடையிலும் முரண்பாட்டை ஏற்படுத்தும் நிலை தொடர்கிறது.

போர் முடிவடைந்து 5வருடங்களாகியும் வடக்கு கிழக்கு மக்கள் இன்னும் அடிப்படை உரிமைகள் இன்றி உள்ளனர். அத்துடன் பாரிய இராணுவகட்டுக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அளுத்கம சம்பவத்தின் அடிப்படையில முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் கல்வி முறையில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய ஆட்சிமுறையால் குற்றங்கள் மிக்க நாடு ஒன்று தீவிரமாக உருவாகி வருகிறது.

மனித உரிமைகள் நிலைவரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போதைய ஆட்சி முறையால் நாட்டின் சமூக அமைப்பு ஒழுங்கற்ற ரீதியில் சென்று கொண்டிருப்பதாக புத்திஜீவிகளும் கலைஞர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-6)

# காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் 145 ஆவது தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் ஆரம்பப் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதிசிரேஷ்ட பிரிவு என நான்கு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது.

இதில் ஆரம்பப் பிரிவில் (தரம் 4-5) 120 சொற்கள் கொண்ட காந்தியடிகளும் கஸ்தூரிபாயும் என்ற கட்டுரைத் தலைப்பும், கனிஷ்ட பிரிவில் (தரம் 6-8) 250 சொற்கள் கொண்ட மகாத்மா காந்தியின் பாடசாலைக் காலம் என்ற கட்டுரைத் தலைப்பும், சிரேஷ்ட பிரிவில் (தரம் 9-11) 300 சொற்கள் கொண்ட தீண்டாமை நீக்கமும் மகாத்மா காந்தியின் பங்களிப்பும் என்ற கட்டுரைத் தலைப்பும், அதி சிரேஷ்ட பிரிவில் (தரம் 12-13) 500 சொற்கள் கொண்ட அஹிம்சை போராட்டக் கோட்பாடும் காந்தியச் சத்தியாக்கிரகமும் என்ற கட்டுரைத் தலைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இக் கட்டுரைப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மாணாக்கர் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் தமது சொந்த முகவரி, மாவட்டம், கல்வி கற்கும் பாடசாலை, கற்கும் தரம், போட்டிப் பிரிவு, கட்டுரைத் தலைப்பு, தொலைபேசி இலக்கம் ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை தனியாக தாம் அனுப்பும் கட்டுரையுடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் கட்டுரை எழுதப்படும் தாள்களில் தமது பெயர் மற்றும் வேறு விபரங்கள் என்பன எழுதப்படலாகாது.

மேலும் ஒரு போட்டியாளர் ஒரு ஆக்கத்தை மட்டும் அனுப்பி வைக்க முடியும் என்பதுடன் கட்டுரைகள் தெளிவான கையெழுத்தில் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டுவதுடன் அனுப்பிய கட்டுரைகளை மீளப் பெறமுடியாது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இதில் நடுவர்கள் தீர்ப்பே இறுதியாக கொள்ளப்படும். பரிசு பெறுவோரின் பெயர் விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது கட்டுரைகளை தத்தமது பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் புரட்டாதி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு பொதுச் செயலாளர், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க முடியும்.

மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் காந்தி ஜெயந்தி கட்டுரைப் போட்டி - 2014 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என காந்தீயம் போட்டிக்குழு ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (செ)






**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815, 021 567 1532
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோட்டம்

நாட்டிலுள்ள சிறைகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சிறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதில் 80 வீதமானவர்கள் சிறைச்சாலை வளாகத்திற்குள் தங்க வைக்கப்பட்டிருந்த கைதிகளும் இதர பணிகளுக்காக வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கைதிகளும் காணப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் பொறுப்பதிகாரியுமான டீ.என். உபுல்தெனிய தெரிவித்தார்.

தப்பிச் சென்றிருந்தவர்களில் நீதிமன்ற விசாரணைகளின் போது ஆஜராகிய சிலர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சிறையிலிருந்து தப்பிச் சென்றுள்ள கைதிகளை கைது செய்வதற்கான தகவல்களை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் பொறுப்பதிகாரியுமான டீ.என். உபுல்தெனிய சுட்டிக்காட்டியுள்ளார். (இ

# மகிழ்ச்சி மலரும் நாளானது கனிந்து வருகிறது தமிழருக்கு

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தன் மூலம் தமிழர்கள் வாழ்வில் மகிழ்ச்சி மலரும் நாள் கனிந்து வருகிறது என தமிழக பா.ஜனதா தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண பா.ஜனதா அரசு மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. அவர்களுக்கு முழு அரசியல் அதிகாரம் கிடைக்க எந்தெந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் வரவேற்போம்.

அந்த நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியுறவுத்துறை செயலர், வெளியுறவுத்துறை மந்திரி மற்றும் பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேசி இருக்கிறார்கள். இலங்கை தமிழர்களுக்கு ஆட்சி அதிகாரத்துடன் கூடிய மறுவாழ்வு திட்டங்கள் மீட்டெடுக்கப்படும் என்று நமது வெளியுறவுத்துறை செயலர் கூறி இருக்கிறார். இதை தான் சுஷ்மா சுவராஜூம் தெரிவித்தார். தற்போது இலங்கை எம்.பிக்கள் மோடியை சந்தித்தன் மூலம் தமிழர்கள் வாழ்வில் மகிழ்ச்சி மலரும் நாள் கனிந்து வருகிறது. விரைவில் தமிழர்கள் சுயகௌரவத்துடன் தலை நிமிர்ந்து வாழ்வார்கள். அதற்கான எல்லா முயற்சிகளையும் மோடி அரசு மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ)


## குத்தகைக்கு காணி தேவை

நீண்ட கால பயிர்ச்செய்கைக்கு குத்தகை அடிப்படையில் 50 பரப்பு காணி தேவை. வடமராட்சி பகுதி விரும்பத்தக்கது. தகுந்த குத்தகை வழங்கப்படும்.

தொடர்பு:- SOND

60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

TP:- 077 6549303

(7482)





# இராசி பலன்

**25.08.2014**
**(ஆவணி 09, திங்கட்கிழமை)**
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 8.15 மணிவரை
மகம் முழுவதும்
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
அமாவாசை விரதம், நல்லைக்கந்தன் தீர்த்தவன்

**மீனம்** — உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மேடம்** — பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**இடபம்** — வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், காலைநேரத்திலேயே சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பொதுத் தொண்டுகளில் ஆர்வம் கூடும்.

**கும்பம்** — இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்** — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** — சிலர் பாராட்டுவது போல் உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**சிம்மம்** — விருப்பங்கள் நிறைவேற குல தெய்வத்தை வழிபடவேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள்.

**தனுசு** — குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவிகேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றுவீர்கள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** — தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** — எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவார், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வருமானம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்கள் [illegible] கைகூடும்.

**கன்னி** — சுப விரயங்கள் கூடும் நாள், பயணங்களால் அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொழிலில் பணியாளர்களை மாற்றும் சிந்தனை மேலோங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையாண்டில் செலான் வங்கியின் வரிக்கு பின் இலாபம் அதிகரிப்பு

செலான் வங்கி 2014 ஜூன் 30-ம் திகதி முடிவடைந்த 6 மாத காலப்பகுதியில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 1,863 மில்லியனை பெற்றுக் கொண்டதன் மூலம் சிறந்த நிதிப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது.

வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 1,213 மில்லியன் அடைந்து கொள்ளப்பட்டுள்ளதுடன் 2013 -ம் ஆண்டின் முதல் 6 மாத காலப் பகுதிக்கான வரிக்குப் பின்னரான இலாபமாக பதிவு செய்யப்பட்ட ரூ.1,002 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 21 வீத அதிகரிப்பாகும்.

இதேவேளை இக்காலாண்டு காலப்பகுதியில் வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபமாக பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 698 மில்லியன் என்ற தொகையானது, கடந்த வருடத்தின் தொடர்புபட்ட இதே 3 மாதங்களில் பெற்றுக் கொள்ளப் பட்ட ரூபா 497 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 41 வீத அதிகரிப்பாகவுள்ளது.

2014 ஜூன் 30-ம் திகதியுடன் முடிவடைந்த 6 மாதங்களில் தேறிய வட்டி வருமானம் ரூபா 4.27 பில்லியனில் இருந்து ரூபா 5.16 பில்லியனாக, 21வீதத்தினால் அதிகரித்துள்ளது. தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் ரூபா 973 மில்லியனில் இருந்து ரூபா 1,056 மில்லினாக உயர்வடைந்தது. கடந்த பல வருடங்களாக செலான் வங்கி திடமான வளர்ச்சிப் போக்கை தொடர்ச்சியாக பேணுவதை வெளிப்படுத்தி வந்த நிலையிலேயே இந்த நிதிப் பெறுபேறுகள் அடைந்து கொள்ளப் பட்டுள்ளன.

# 10 ரூபாய் தாள் பாவனையிலிருந்து அகல்கிறது!

இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வரும் பத்து ரூபாய் நாணயத் தாளின் அச்சிடலையும் விநியோகத்தையும இடைநிறுத்தியுள்ள இலங்கை மத்திய வங்கி, வங்கிகளிடமிருந்து பத்து ரூபாய் தாள்களை மீள பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற் கொண்ட வண்ணமுள்ளது.

இதற்கு பதிலாக பத்து ரூபாய் நாணயக்குற்றிகளின் பாவனையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொண்டுள்ளதுடன், நாட்டின் 25 மாவட்டங்களை குறிக்கும் வகையில் பத்து ரூபா நாணயக்குற்றியை பொறிக்கும் நடவடிக்கையை இலங்கை மத்திய வங்கி மேற்கொண்டுள்ளதாக வங்கியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

# அதிகளவு மதிப்பைப் பெற்ற நிறுவனமாக ஜோன் கீல்ஸ்

முன்னணி ஆங்கில மொழி சஞ்சிகையான LMD மூலம் வருடாந்தம் முன்னெடுக்கப்படும் இலங்கையின் அதிகளவு மதிப்பை பெற்ற நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தலில் 9-வது தடவையாக ஜோன்கீல்ஸ் ஹோல்டிங்ஸ் முதலிடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே கொமர்ஷல் வங்கி மற்றும் MAS ஆகிய நிறுவனங்கள் பெற்றுக் கொண்டுள்ளன.

முன்னணி ஆய்வு நிறுவனமான நீல்சன் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்திருந்த தரப்படுத்தலின அடிப்படையில் இந்த ஆண்டுக்கான நிறுவனங்களின் வரிசை வெளியிடப்பட்டுள்ளது. 100 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் பணியாற்றும் 800 ஊழியர்களிடமிருந்து கருத்துக் கணிப்புகள் முன்னெடுக்கப்பட்டு இந்த தரப்படுத்தலில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

பத்தாம் ஆண்டு தரப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டிருந்தமையின் காரணமாக, இந்த ஆண்டு தரப்படுத்தலின் போது ஒலிம்பிக் பதக்கம் அடிப்படையில் நிறுவனங்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.

JOHN KEELLS HOLDINGS PLC

# டிமோவுடன் கைகோர்த்துள்ள கொமர்ஷல் வங்கி




வர்த்தக நோக்கு கொண்ட TATA ரக வாகனங்களை கவர்ச்சிமிக்க லீசிங்கை அடிப்படையில் வழங்குவதற்காக மீண்டும் ஒரு தடவை கொமர்ஷல் வங்கி வரையறுக்கப்பட்ட டீசல் அன்ட் மோட்டர இன்ஜினியரிங்(DIMO)நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது. இந்த 6 மாத கால ஊக்குவிப்பு காலம் ஓகஸ்ட் 2014-ல் தொடங்குகின்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் TATA ரக வாகனங்களைக் கொள்வனவு செய்யும் கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்களுக்கு DIMO நிறுவனம்கணிசமான கழிவுகளை வழங்கும். வங்கி குறைந்த வட்டி அடிப்படையில் மாதாந்தம் செலுததக்கூடிய குத்தகை வசதிகளை வழங்கும். TATA ட்ரக்குகள் மற்றும் பஸ்வண்டிகள் இந்த விஷேட லீசிங் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

வங்கியின் இந்த விஷேட திட்டத்தின் மூலம் லீசிங் அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும வாடிக்கையாளர்களுக்கு விஷேட காப்புறுதி வசதிகளையும் வங்கி வழங்கும். இந்தத் திட்டத்தின் மூலம் மிகக் குறைவான தோர் தொகையையே காப்புறுதி சந்தாவாக செலுத்த வேண்டியிருக்கும்.

# சந்தைப்படுத்தல் நிறுவன விருது; பிஸ்கட் லிமிட்டட்டிற்கு 2 தங்கம்

உள்நாட்டு உணவுத்துறையில் முன்னணி பெருநிறுவனங்களில் ஒன்றான சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (CBL) ஆனது, அண் மையில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) மூலம் ஏற்பாடு செய்யப்படும் தேசிய விற்பனை காங்கிரஸ் 2014 (NASCO) விருது வழங்கும் நிகழ்வில் இரு தங்கம் உள்ளடங்கலாக 5 விருதுகளை வென்றெடுத்துள்ளது.

சிறந்த விற்பனை செயற்திறனுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் வருடாந்தம் SLIM விற்பனை காங்கிரஸ் நிகழ்வு இடம்பெறுகின்றது. வேகமாக நகரும் நுகர்வு பொருட்கள் பிரிவின் கீழ் CBL இன் விற்பனை படையினர் இவ் விருதுகளை வென்றிருந்தனர்.

CBL இன் சாதனை குறித்து இந்நிறுவனத்தின் பணிப்பாளரும்/குழும விற்பனை பொது முகாமையாளருமான ஐ.எம்.கார்ன் கருத்து தெரிவிக்கையில், "SLIM NASCO விருது விழாவில் பெற்ற எமது வெற்றியானது CBL விற்பனை படையினரின் முயற்சி காரணமாகவே சாத்தியமானது என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் எமது தயாரிப்புக்களை கொண்டு செல்லல் நிறுவனத்தின் உயிர் நாடியாக அமைந்துள்ளது. இன்று அந்தந்த உற்பத்தி பிரிவுகளில் சந்தை தலைமைத்துவத்தை பெறு வதற்கு எமது சிறப்பான விற்பனை படையினரே பிரதானகாரணம்ஆகும் நடப்பு ஆண்டு முழுவதும். எமது விற்பனை படையினர் தொடர்ச்சியான வெற்றியை குவித்து வருவதுடன், இந்த வெற்றி முழு CBL குடும்பத்தினதும வெற்றியாகும்" எனத் தெரிவித்தார்.

இலங்கையில் விற்பனை நபர்களின் முயற்சி மற்றும் செயற்திறனை கௌரவிக்கும் நோக்கில் தம்மை அர்ப்பணித்துள்ள ஒரேயொரு தேசிய மட்ட முதன்மை நிகழ்வாக SLIM NASCO வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு விளங்குகிறது. விற்பனை தொழில முறையின் தரத்தை உயர்த்துதல், செயற்திறன் மற்றும் ஆற்றலை கௌரவித்து வெகுமதி வழங்குதல் மற்றும் தொழிற் துறையின் மதி ப்பை மேம்படுத்தல் ஆகியன இதன் குறிக்கோளாக திகழ்கிறது.

# மோடிக்கு ஆலோசகராகிறார் சுப்பிரமணியன்

அமெரிக்காவில் வசிக்கும் பொருளாதார நிபுணர் அரவிந்த் சுப்ரமணியன், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமரின் தலைமை பொருளாதார ஆலோசராக இருந்த ரகுராம் ராஜன், ரிசர்வ் வங்கி ஆளுநராக கடந்த செப்டம்பரில் பதவியேற்றார். இதன்பிறகு இப்பதவி நிரப்பப்படவில்லை. இந்தியா பொருளாதார வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்லப்படும் என பிரதமர் மோடி கூறியுள்ளார். இதற்கேற்ப அந்நிய முதலீட்டை ஈர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை மத்திய அரசு அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

கடந்த 64 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று சுதந்திர தின விழாவில் மோடி குறிப்பிட்டார். இந்நிலையில் பிரதமரின் பொருளாதார ஆலோசகர் பதவியை உடனடியாக நிரப்ப மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த பதவிக்கு, அமெரிக்காவின் பீட்டர்சன் சர்வதேச பொருளாதார மையத்தில் மூத்த ஆட்சிமன்ற உறுப்பினராக இருக்கும் அரவிந்த் சுப்ரமணியனின் பெயரை மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி பரிந்துரை செய்துள்ளதாக தெரிகிறது.

2011-ம் ஆண்டு வெளியுறவு கொள்கை பத்திரிகை வெளியிட்ட உலகின் 100 சிறந்த சிந்தனையாளர்கள் பட்டியலில் இவர் இடம்பெற்றார்.

இந்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு விரைவில் சுப்ரமணியன், பிரதமரின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்படுவார் என்று நிதியமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# 7,000 புள்ளிகளை கடந்தது ப.சந்தை

3 ஆண்டுகளின் பின்னர் கொழும்பு பங்குச் சந்தை கடந்த வாரம் 7,000 புள்ளிகள் எனும் இலக்கை கடந்துள்ளது. குறைவான வட்டி வீதங்களின் காரணமாக கொழும்பு பங்குச் சந்தையின் மீதான நாட்டம் முதலீட்டா ளர்கள் மத்தியில் அதிகளவு காணப்படுவதாகவும், ஆனாலும் மதிப்புக்குறைந்த பங்குகளின் மீது அதிகளவான முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் இந்த ஆண்டில் கொழும்பு பங்குச்சந்தை பதிவு செய்து வரும் உயர்வான பெறுமதிகளில் சரிவு ஏற்படக்கூடிய வாய்ப்புகள காணப்படுவதாகவும் பங்குச்சந்தை முகவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

2011-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18-ம் திகதியை தொடர்ந்து, கடந்த வாரம கொழும்பு பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்கள் நிறைவடையும்பொழுது அ.ப. விசுட்டெண் 7004.75எனும்உயர்வான பெறுமதியை பதிவுசெய்திருந்தது.

# சகாரா ஹோட்டல்களை வாங்குவதற்கு சுல்தான் முடிவு



சகாரா நிதி நிறுவனத்துக்கு சொந்தமாக, வெளிநாடுகளில் உள்ள 3 ஹோட்டல்களை புருனே சுல்தான் 13 ஆயிரம் கோடி இந் திய ரூபாய்க்கு வாங்கவுள்ளதாக தகவல வெளியாகியுள்ளது. சகாரா நிதி நிறுவனத்தின் தலைவர் சுப்ரதா ராய், முதலீட்டாளர்களிடம் 20 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் மோசடி செய்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து கைது செய்யப்பட்ட சுப்ரதா ராய், 5 மாதங்களாக டில்லி திகார்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். "பிணை வேண்டுமானால், 10 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் பிணைத் தொகை செலுத்த வேண்டும்"என, அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து வெளிநாடுகளில் உள்ள தனக்கு சொந்தமான ஹோட்டல்களை விற்று பிணைத் தொகையை செலுத்துவதாக சுப்ரதா ராய் கூறினார். இந்நிலையில் உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரான புருனே சுல்தான் இந்த 3 ஹோட்டல்களையும் 13 ஆயிரம் கோடி இந்திய ரூபாய்க்கு விலை [illegible]

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,943.85 | 7,008.02 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,820.98 | 3,863.88 ⇧ |
| புரள்வு (ரூபா.மில்.) | | 15,935.209 |

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** லங்கா சென்சரி(W)(3.20), தப்பிரபேன்(5.20), சிலோன் லெதர்(W)(4.40),சிரஸ் லிசர்(W)(2.60)எம்.ரி.டி வோல்கர்ஸ்(49.90).

**வீழ்ச்சியடைந்த பங்குகள்(ரூ):** றோயல் பார்ம்(34.30), பேருவளை வோல்க்இன் (92.60)அஸ்கட் ஹோல்டிங்(94.60)மோரிசன் (X)(221.50),சலிமா[illegible]

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.74 | 131.61 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 212.68 | 218.78 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 169.97 | 175.55 |
| சுவிஸ் பிராங் | 140.28 | 145.41 |
| கனேடிய டொலர் | 117.01 | 120.97 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.92 | 123.41 |
| சிங்கப்பூர் டொலர் | 102.54 | 105.89 |
| ஜப்பான் யென் | 1.23 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையினால் 322 குடும்பங்கள் பாதிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக இதுவரையில் 322 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். இதேவேளை, நில்வள கங்கை, களுகங்கை, கிங்கங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் வான் பாயும் அளவிற்கு உயர்வடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் லக்ஸபான மற்றும் கெனியன் நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. சீரற்ற வானிலையால் காலி மாவட்டத்திலேயே அதிக பாதிப்புகள் பதிவாகியுள்ளதாகவும் பிரதீப் கொடிப்பிலி கூறியுள்ளார்.

கொழும்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய வானிலை காரணமாக சேதங்கள் ஏற்றப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. மொனராகலை கும்கனை பகுதியில் வீசிய கடும் காற்றினால் 10 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் பல பகுதிகளில் இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இடி மின்னலால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொளள முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் வலியுறுத்தப்படுவதாக திணைக்களத்தின் வானிலை அதிகாரி கே.சூரியக்குமாரன் தெரிவித்தார்.

களுத்துறை, காலி, மாத்தறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மீள நீடிக்கப்படவில்லை என தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் சிரேஷ்ட புவியியல் நிபுணர் கலாநிதி காமினி ஜயதிஸ்ஸ குறிப்பிடுகி ன்றார். சீரற்ற வானிலைக் காரணமாக டெங்கு நுளம்பு பரவகூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக கொழும்பில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அதிக அவதானம் செலுத்தும் வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு மாநகரசபையின் தலைமை சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜய முனி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில் 40 வீதம் டெங்கு நோயாளர்களின் பதிவு குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சீரற்ற வானிலை தொடர்பில் கவனத்திற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நிலவும் சீரற்ற வானிலையால் உரிய நேரத்திற்கு பரீட்சார்த்திகள் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு செல்வதில் சிக்கல்கள் ஏற்படலாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே புஷ்பகுமார குறிப்பிட்டார்.

எனவே, பரீட்சை தொடங்குவதற்கு சற்றுநேரத்திற்கு முன்னரே மாணவர்கள் பரீட்சை நிலையங்களை சென்றடையும் வகையில், தயார்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். (இ)

## நிலத்தில் அடித்து குழந்தை கொலை

(கொழும்பு)

பேருவளை பகுதியில் தந்தை ஒருவர் தனது ஒன்றரை வயது பெண் குழந்தையை நிலத்தில் அடித்து கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தந்தை பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றில் வைத்தே தனது மகளை கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (இ)

## எபோலா வைரஸை முழுமையாக கட்டுப்படுத்த பல மாதங்கள் தேவை

### உலக சுகாதார அமைப்பு

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸை முழுமையாக கட்டுப்படுத்த பல மாதங்கள் தேவைப்படுமென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்பார்த்ததை விட வேகமாக வைரஸ் பரவி வருவதாகவும் உலக சுகாதார அமைப்பின் துணை இயக்குநர் கெய்ஜி புகுடா எச்சரித்துள்ளார். இதனிடையே சியரோலியோனில், எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லாமல் பாதுகாப்பவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுமென அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கினி, நைஜீரியா, சியராலியோன், லைபீரியா உள்ளிட்ட நாடுகளில் கடந்த மார்ச் முதல் பரவி வரும் எபோலா வைரஸால், ஆயிரத்து 427 பேர் பலியாகியுள்ளனர். 2 ஆயிரத்து 615 பேர் வரை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (இ)

## சாட்சியங்களுக்கு பணம் கொடுத்ததாக பொய்யான குற்றச்சாட்டுகள் முன்வைப்பு

(கொழும்பு)



சாட்சியாளர்களுக்கு பணம் வழங்கப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் நபர்களுக்கு பணம் செலுத்தப்பட்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள, தமிழ் தாய்மார்களின் கண்ணீரை விலை கொடுத்து வாங்க முடியாது காணாமற் போனவர்களின் பெற்றோரே இவ்வாறு சாட்சியமளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சாட்சியாளர்களை இழிவுபடுத்தும் வகையில் எவரும் கருத்து வெளியிடக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். குற்றச்சாட்டுக்கள் உண்மை என்பதனை முடிந்தால் அரசாங்கம் நிரூபிக்கட்டும் என அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணியான வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு காணாமற் போதல் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குரல் கொடுத்திருந்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தெற்கின் சிங்களத் தாய்மாருக்கு நட்ட ஈடு கிடைக்கப்பெற்றதாகவும், வடக்கின் தமிழ்த் தாய்மாருக்கு எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## பொலிஸார் மீது தாக்குதல்

(கொழும்பு)

கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தப்பி ஓடியுள்ளதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊருபொக்க நகரில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு கான்ஸ்டபிள்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை நிறுத்தி சோதனையிட்டபோது, சாரதி மதுபோதையில் இருந்தது தெரியவந்துள்ளது.

எனவே குறித்த கான்ஸ்டபிள்கள் இருவரும் அவர்களைக் கைதுசெய்ய முற்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேகநபரால் கான்ஸ்டபிள்கள் இருவரும் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, பின்னால் இருந்து பயணித்தவர் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 34 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் - Not PR)
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/1787

பிறப்பு: 1961 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 41 ½ உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L / Transport Company (அவுஸ்ரேலியா)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர். பிள்ளைகள் உண்டு.
தொ.இ: B/1788

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 38 ½ உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (கனடா– சிற்றிசன்)
தொ.இ: B/1790

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 55 ½ சூரி செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
தொ.இ: B/1797

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 22 செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம், மறுமணமும் ஏற்கலாம்.
தொ.இ: G/2647

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 59 ½
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்
தொ.இ: G/2648


பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 24 ½ செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L / முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/2649

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 33 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/2650

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-பாக். படைகள் மோதல்; நான்கு பேர் பலி, பலர் படுகாயம்



சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிராந்தியத்தில் இந்திய- பாகிஸ்தான் படைகள் இடையிலான துப்பாக்கி மோதலில் இரு நாடுகளிலும் தலா இருவராக 4 கிராமத்தவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் ஒரு பெண்ணும், முதியவர் ஒருவரும் ஒரு குழந்தையும் அடங்குகின்றனர்.

மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.மோதலைத் தூண்டியதாக இரு தரப்பும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளது. கடந்த சில வாரங்களில் பல தடவைகள் ஆங்காங்கு சிறிய அளவிலான ஆயுதப் பிரயோகங்கள் தொடர்ச்சியாக நடந்துள்ளன.

காஷ்மீர் பிரிவினைவாதிகளை பாகிஸ்தானிய தூதுவர் சந்தித்ததை அடுத்து டில்லியில் இருதரப்பு பேச்சுக்களை இந்தியா இடைநிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# உண்மைத்தன்மை பற்றி அமெரிக்கா விசாரணை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தம்செய்யப்பட்ட பிரசார நிறுவனங்கள் வழங்கிய தகவல்களின் உண்மை தன்மை குறித்து அமெரிக்கா விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க நீதி திணைக்களம் இது குறித்து தான் மீளாய்வு செய்யப்போவதாக தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட பிரசார நிறுவனங்கள் சமர்ப்பித்த சகல தரவுகளையும் நாங்கள் மீளாய்வு செய்வோம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிழையான தகவல்களை வேண்டுமென்றே வழங்குபவர்களுக்கு பாரிய அபராதம் விதிக்கப்படலாம் அல்லது சிறைத்தண்டனைகள் கூட வழங்கப்படலாம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 190 | 160 |
| தக்காளி | 50 | 70 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 70 | 80 |
| கரட் | 80 | 100 | 100 | 100 |
| பூசணி | 20 | 40 | 30 | 40 |
| புடோல் | 30 | 50 | 70 | 50 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 70 | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 70 | 100 |
| பயற்றங்காய் | 70 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 50 | 50 | 50 |
| போஞ்சி | 120 | 140 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 110 | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | — |

# ஊடகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லையாம்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

ஊடகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். ஊடகங்கள் மீது எவ்வித அடக்குமுறைகளும் பிரயோகிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமூக இணைய வலையமைப்பு சார் ஊடகங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாடடுக்களில் உண்மையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியையும் அவரது குடும்பத்தினரையும் எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்யும் காட்சிகளை இலங்கைத் தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்புச் செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஊடக சுதந்திரத்தை தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புச் செய்யப்படும் இவ்வாறான தகவல்களின் மூலம் தெரிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் கருத்துக்களை முழுமையாக வெளிப்படுத்த அரச ஊடகங்கள் மட்டுமே காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளுக்கு பல தனியார் ஊடகங்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

# திருடப்படும் ஆடுகள்

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை பட்டி ஓடை கிராமத்தில் தொடர்ச்சியாக ஆடுகள் திருடப்பட்டு வருவதாக பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை 3 ஆடுகள் திருட்டுப் போயுள்ளதாக உரிமையாளரினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒருமாத காலத்திற்கிடையில் 25 ஆடுகள் திருடப்பட்டுள்ளது என பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. (இ-60)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 115

நிதர்ஷ் சன்

**தவறு**

தவறு என்பது மனித இயல்பு – பொது மொழி


**நாம் ஒரு தவறை செய்யும் போது**

- அதை நியாயப்படுத்தக் கூடாது.
- அதை மறுக்கக் கூடாது.
- பிறரை குற்றம் சாட்டக் கூடாது
- அதை மீண்டும் செய்யக் கூடாது.

**பிறகு என்னதான் செய்ய வேண்டும்?**

ஒப்புக்கொள்ளுங்கள்
↓
மன்னிப்புக் கோருங்கள்
↓
கற்றுக்கொள்ளுங்கள்.

கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்

**பொண்ணுங்க குழந்தையா இருக்கிற வரைக்கும் toysஐ தேடுவாங்க...**



**குமரி ஆனதும் boysஐ தேடுவாங்க... அவங்க வாழ்க்கையில விளையாட...**

அநோஜன் சிவா


**உலகில் செய்வதற்குக் கடினமான 3 விடயங்கள்:**

1. தலை முடிகளை உங்களால் எண்ண முடியாது.
2. கண்களை சவர்க்காரத்தால் கழுவ முடியாது.
3. நாக்கு வெளியே இருக்கும் போது உங்களால் மூச்சு விட முடியாது.

இப்போது வெளியில் போட்ட நாக்கை தயவு செய்து உள்ளே எடுத்துக் கொள்ளுங்கள்....

ஆப்பு சுவையாக இருந்தால் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

சச்சி சங்கீத்



டோறின் மன்மதநாயகம்

ஒரு புத்திசாலியால்
சாதிக்க முடியாததை
சிலநேரங்களில் ஒரு
பொறுமைசாலி
சாதித்து விடுகிறான்.

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் விநியோகத்திற்கு முன்னுரிமையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்., சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்துதல் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு அடுத்த வருட (2015) வரவு செலவுத் திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்படவுள்ளதாக நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடிநீருக்கு பற்றாக்குறை காணப்படும் பிரதேசங்களில் பொதுக்கிணறுகள் அமைக்கவும், குழாய் மூலம் குடிநீர் வழங்கவும் நிதி ஒதுக்கப்படும்.

அத்துடன், மின்விளக்குகள் பொருத்துவதற்காக 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில், இவ்வருடம் 633 மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றில் 458 மின்விளக்குகள் பிரதேச சபையாலும், 175 மின்விளக்குகள் பொது மக்களின் பங்களிப்பாலும் பொருத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

நன்றி-அததெரண



# சுன்னாகம் கழிவு எண்ணெய்க்கசிவு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## சித்தார்த்தன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தெற்குப், பிரதேசத்திற்குட்பட்ட சுன்னாகம் பிரதேச கிணறுகளில் காணப்படுகின்ற கழிவு எண்ணெய் பிரச்சினைக்கு உரிய தீர்வினைக் காண்பதற்காக ஜனாதிபதியுடனும் மின்சக்தி எரிசக்தி அமைச்சருடனும் வடமாகாணசபை தொடர்பு கொள்ள வேண்டுமென்று புளொட் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சுன்னாகம் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கழிவு எண்ணெய்க் கசிவு சிறிது சிறிதாக அதிகரித்து ஏழாலையிலுள்ள கிணறுகளையும் மாசடையச் செய்துள்ளது.

இது தொடர்ந்து காங்கேசன்துறை வரை செல்லக்கூடிய அபாய நிலையும் தோன்றியுள்ளது. இவ்விடயம் தொடர்பாக துறைசார் வல்லுநர்களுடன் தொடர்புகொண்ட போது இதன் பாதிப்பு நீண்டகாலப் பிரச்சினையாகும் என என்னிடம் அவர் தெரிவித்திருந்தார்.

எனவே இதற்கு நிரந்தரத் தீர்வினைக் காணவேண்டியது மிகவும் அவசியமாகும். இத் தண்ணீரில் முகம்கூடக் கழுவக்கூடாது என நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

இதனை இப்படியே விட்டால் பல இடங்களுக்கும் பரவக்கூடிய வாய்ப்புள்ளது. இப் பகுதியில் வீட்டுத்தேவை மட்டுமன்றி விவசாய நிலங்களும் உள்ளன.

ஆகவே இதனை முக்கிய பிரச்சினையாக எடுத்து ஜனாதிபதியுடனும் மின்சார அமைச்சருடனும் மாகாணசபை தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே இது தொடர்பில் முதலமைச்சர் பொறுப்பானவர்களுடன் கலந்துரையாடுவதுடன் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடி இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து உறுப்பினர் சித்தார்த்தன் உள்ளிட்ட ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் வடக்கு மாகாணசபையின் 14 ஆவது அமர்வு கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற போது வரட்சி தொடர்பான கலந்துரையாடலில் வலியுறுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# உரும்பிராய் வாகையடி வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நெல்சிப் திட்டத்தின்கீழ் உரும்பிராய் வாகையடி வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வீதியின் புனரமைப்பு வேலைத்திட்டத்தினை வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜங்கரன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் துரைராஜா, உபதவிசாளர் தர்மலிங்கம் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை, அச்சுவேலி பயிற்றோலை வீதி, கோப்பாய் வடக்கு இலகடிவீதி, உரும்பிராய் ஊரெழு மயான வீதி, அச்செழு வேவிபுரம் போயிட்டி குறுக்குவீதிகளையும் சென்று பார்வையிட்டிருந்தார்கள். (இ)





யாழ்.தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பின் கீழ் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான மாதாந்த உதவித்திட்டம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட போது

# முன்பள்ளி ஆசிரியர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு பனை அபிவிருத்திச்சபை உதவி

வலிகாமம் கொத்தணிக்கு கீழ் தென்னை,பனை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவ பனை அபிவிருத்தி சபை முன்வந்துள்ளது.

பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்தின் வழிகாட்டலில் கூட்டுறவு முறையிலான பாற்பண்ணைத் திட்டம், கூட்டுறவு முறையிலான பனைக் கைத்தொழில் திட்டம் ஆகியவற்றின் ஊடாக இவர்களின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சங்கானை, மானிப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர் ஆகிய 7 தென்னை, பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களாலும் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் நேற்று முன்தினம் வலிகாமம் கொத்தணி காரியாலயத்துக்கு வரவழைக்கப்பட்டு இத்திட்டங்கள் குறித்து அறிவுறுத்தப்பட்டார்கள்.

இச்சந்திப்பு கொத்தணி முகாமையாளர் சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் முன்பள்ளி ஆசிரியர்களான உங்களின் அர்ப்பணிப்பு, பற்றுறுதி நிறைந்த சேவைகளை நான் நன்கு அறிவேன். இன்றைய சிறுவர்கள்தான் நாளைய எமது சமூகம். எனவே நாளைய சமூகத்தை உருவாக்குகின்ற சிற்பிகள் நீங்கள் தான்.

அப்போப்பட்ட பாரிய கடமையை செய்கின்ற உங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற தலையாய பொறுப்பு மக்களையும், சமூகத்தையும் நேசிப்பவர்களுக்கு நிச்சயம் உள்ளது.

இந்நிலையில் குறைந்த ஊதியத்தில் மாபெரும் கடமையை செய்கின்ற உங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எமது பனை அபிவிருத்தி சபை முன்வந்துள்ளது. உங்கள் கூட்டு முயற்சியை கொண்டு நீங்கள் ஒரு பாற்பண்ணையை கூட்டுறவு முறையில் உருவாக்க முடியும். அதே போல பனைக் கைத்தொழிலை கூட்டுறவு அடிப்படையில் மேற்கொள்ள முடியும்.

பனைக் கைத்தொழில் மூலம் எமது சபை மட்டக்களப்பில் 8 ஆயிரம் குடும்பங்களை சொந்த கால்களில் இன்று நிற்க வைத்துள்ளது. எமது சபையின் இன்றைய பொருளாதார சாதனைகளுக்கு அடிப்படையாக இருப்பது மக்கள் நலன் சார்ந்த அரசியல் வழிமுறையே ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பனை அபிவிருத்திச்சபைக்கு ஜப்பானிய நிபுணர் வருகை

## தமிழில் சரளமாக பேசக் கூடியவர் எனத் தகவல்

பனை அபிவிருத்தி சபையின் உற்பத்திப் பொருட்களை மிகவும் வெற்றிகரமாக சந்தைப்படுத்துகின்ற நுட்பங்களை கற்பித்துக் கொடுக்கின்றமைக்கு ஜப்பான் நாட்டில் இருந்து துறை சார்ந்த நிபுணர் ஒருவர் வருகை தந்துள்ளார்.

ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் பெண் அதிகாரிகளில் ஒருவரான யோகோகவாஸ் என்பவரே இரு வருடங்களுக்கு நாட்டில் தங்கி இருந்து சந்தைப்படுத்தல் உத்திகளின் நுட்பங்களை கற்பித்துக் கொடுக்கவுள்ளார்.

இவர் சந்தைப்படுத்தல் துறையில் 14 வருட கால அனுபவம் உடையவர். அத்துடன் சரளமாக தமிழ் பேசக் கூடியவர்.

பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்துக்கும் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் உயர் நிலை அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் பலனாகவே இம்முகவர் நிறுவனத்தின் தொண்டர் சேவைத் திட்டத்தின் கீழ் இவரின் சேவை கிடைக்கப் பெற்றுள்ளது.

இவரை பனை அபிவிருத்தி சபை ஊழியர்களுக்கு சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாக அறிமுகப்படுத்தி வைத்தார்.


யுத்தத்தால் அழிவுற்ற ஜப்பான் தேசத்தை ஜப்பானிய மக்கள் கடின உழைப்பாலும், கடமை உணர்வாலும், தேசப் பற்றாலும் கட்டி வளர்த்தனர். ஜப்பான் அரசாங்கம் அழித்தவர்களை பழி வாங்குகின்ற எண்ணத்தை கொண்டிருக்கவில்லை.

மாறாக இணக்க அரசியல் வழிமுறைகள் மூலமே ஜப்பானை உலகின் தலை சிறந்த நாடுகளில் ஒன்றாக கட்டி எழுப்பியது. எனவே ஜப்பானியர்களிடம் இருந்து சுறுசுறுப்பு, கடமை உணர்வு, தேசப்பற்று ஆகியவற்றை கற்று நாமும் எமது பனை அபிவிருத்தி சபையை வளர்ச்சி பாதைக்கு இட்டு செல்வோம் என்றுபசுபதி சீவரத்தினம் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# அரண்மனை ஊழியன்!



:....எரியும் நெருப்பில் எத்தனை கட்டைகளைப் போட்டாலும் போதாது; எத்தனை நதிகள் வந்து கலந்தாலும் சமுத்திரத்துக்கு திருப்தி உண்டாகாது. எவ்வளவு உயிர்களைக் கவர்ந்து சென்றபோதிலும் காலன் திருப்தி அடைவதில்லை.

என் மனைவி என்னை அன்போடு நேசிக்கிறாள் என்று எந்த மடையனாவது எண்ணினால் அவன் கூண்டில் அகப்பட்ட பறவைபோல் வாழ்நாள் முழுவதும் மனைவிக்கு அடிமையாகவே இருப்பான்.

அரசன் இவ்வாறாக சிந்தனையில் ஆழ்ந்தான். அந்தப்புரத்துக்குள் கோரபனும். தந்திலனும் மட்டும்தான் தடையின்றிச் செல்லக்கூடியவர்கள். ஆகவே, தந்திலனின் துரோகச் செயலை ஒரு வேளை கோரபன் பார்த்திருக்கக் கூடும் என்று எண்ணமிட்டான் அரசன்.

இவ்வாறு எண்ணி, அரசன் துயரத்தோடு இருந்தான்.

அன்றுமுதல் தந்திலனிடம் அரசன் அலட்சியமாக நடந்துகொண்டான். அரண்மனைக்குள் நுழையாதபடி அவனைத் தடைசெய்தான்.

அரசனின் இந்தத் திடீர் அலட்சியப் போக்கை உணர்ந்த தந்திலன் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தான்.

சரியாகத்தான் கூறியிருக்கிறார்கள்.

செல்வம் சேர்ந்தவனிடம் அகம்பாவமும் சேரும். உணர்ச்சிவசப்படுபவன் ஆபத்தில் சிக்கிக்கொள்வான். பெண்ணால் துன்பப்படாதவன் யாராவது உண்டா? மன்னன் யாரைத்தான் மனப்பூர்வமாக நேசிக்கிறான்? காலனின் எல்லையைத் தாண்டியவன் யார்? ஏழையை மதிக்கிறவன் யாராவது உண்டா? கெடுமதியாளனிடம் தொடர்பு கொண்டவன் சுகமாகத் திரும்பியது உண்டா?

காக்கையிடம் சுத்தத்தையும் சூதாடியிடம் சத்தியத்தையும் பாம்பினிடம் இரக்கத்தையும் பெண்ணிடம் வெறுப்பையும் அலியிடம் ஆண்மைமையும் குடிகாரனிடம் உறுதியையும் அரசனிடத்தில் நேசத்தையும் இவற்றை எல்லாம் யாராவது பார்த்தது உண்டா? அல்லது கேட்டது உண்டா? ஆனால் இவையனைத்தும் முற்றிலும் உண்மையே....
................. ....

(தொடரும்)

08.2014
25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1580 - ஸ்பெயின் அல்காண்டரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் போர்த்துக்கலை வென்றது.
- 1609 - இத்தாலிய வானியல் அறிஞர் கலிலியோ கலிலி தனது முதலாவது தொலைநோக்கியை அறிமுகப்படுத்தினார்.
- 1732 - யாழ்ப்பாணத் தளபதியாக கோல்ட்டெரஸ் வூல்டடெரஸ் நியமிக்கப்பட்டான்.
- 1758 - ரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக் மன்னன் சோண்டோர்ஃப் என்ற இடத்தில் ரஷ்ய இராணுவத்தைத் தோற்கடித்தான்.
- 1768 - ஜேம்ஸ் குக் தனது முதலாவது பயணத்தை ஆரமபித்தான்.
- 1803 - யாழ்ப்பாணம் பனங்காமம் பற்று மன்னன் பண்டாரவன்னியன் விடத்தல் தீவைக் கைப்பற்ற எடுத்த முயற்சி மேஜர் வின்செண்ட் என்பவனால் முறியடிக்கப்பட்டது.
- 1825 - உருகுவே நாடு பிரேசிலிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1830 - பெல்ஜியப் புரட்சி ஆரம்பமானது.
- 1912 - சீனத் தேசியவாதிகளின் குவாமிங்தாங் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1920 - போலந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் ஆகஸ்ட் 13 இல் ஆரம்பித்த போர் செம்படையினரின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது.
- 1944- இரண்டாம் உலகப் போர்: பாரிஸ் நாசி ஜேர்மனியிடமிருந்து நட்பு நாடுகளால் விடுவிக்கப்பட்டது.
- 1955 - கடைசி சோவியத் படைகள் ஆஸ்திரியாவை விட்டு வெளியேறின.
- 1981 - வொயேஜர் 2 விண்கலம் சனிக்கு மிகக்கிட்டவாகச் சென்றது.
- 1989 - வொயேஜர் 2 விண்கலம் நெப்டியூனுக்குக் கிட்டவாகச் சென்றது.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலிருந்து பெலருஸ் பிரிந்தது.

### பிறப்புகள

- 1906 - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (இ 1993)
- 1929 - எஸ். வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை, பாடகி
- 1962 - தஸ்லிமா நசுரீன், வங்காள தேச எழுத்தாளர்
- 1952 - விஜயகாந்த், தமிழ்த் திரைப்பட நடிகர், அரசியல்வாதி

### இறப்புகள்

- 1822 - வில்லியம் ஹேர்ச்செல், வானியலாளர் (பி. 1738)
- 1867 - மைக்கேல் பரடே, ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1791)
- 1908 - ஹென்றி பெக்கெரல், பிரெஞ்சு இயற்பியலாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி. 1852)
- 1976 - எல்விண்ட் ஜோன்சன், சுவீடன் நாட்டு எழுத்தாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)
- 2007 - தாதி பிரகாஷ்மணி, பிரம்ம குமாரிகள் அமைப்பின் தலைமை ராஜயோகினி
- 2008 - தா. இராமலிங்கம், ஈழத்துக் கவிஞர் (பி. 1933)
- 2009 - எட்வேர்ட் கென்னடி, அமெரிக்க செனட்டர் (பி. 1932)
- 2012 - நீல் ஆம்ஸ்ட்ராங், சந்திரனில் தரையிறங்கிய முதல் மனிதர் (பி. 1930)

### கிருபானந்த வாரியார்




திருமுருக கிருபானந்த வாரியார 1906ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25, திகதி பிறந்தார். சிறந்த முருகபக்தர். தினமும் ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்துவதையே தவமாகக்கொண்டு வாழ்ந்தவர். சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்தறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமைபெற்றவர. "அருள்மொழி அரசு", எனறும் "திருப்புகழ் ஜோதி" என்றும் அனைவராலும் பாராட்டப்பட்டவர.

இவரது இயற்பெயர் கிருபானந்தவாரி. தமிழ் நாட்டின் வேலூர் மாவட்டதில் உள்ள காட்பாடிக்கு அருகில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள காங்கேய நல்லூர் என்னும் சிற்றூரில் மல்லையதாசருக்கும், மாது ஶ்ரீகனகவல்லி அம்மையாருக்கும் பிறந்த பதினொரு பிள்ளைகளில் நான்காவது மகவாக அவதரித்தவர். செங்குந்த வீர சைவ மரபினர். ஐந்தாவது வயதில் திருவண்ணாமலையில் வீர சைவகுல முறைப்படி பாணிபாத்திர தேவர் மடத்தில் சிவலிங்க தாரணம் செய்விக்கப்பெற்றார். வாரியார் சுவாமிகள் அமிர்தலட்சுமியை தனது 19 ஆவது வயதில் கல்யாணம் புரிந்தார். இவரது தந்தையார் இசையிலும் இயலிலும் வல்லவர், மாபெரும் புராண வல்லுநர். தந்தையாரே வாரியாருக்கு கல்வி, இசை, இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தந்தார். எட்டுவயதிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்றவர். 12 வயதிலேயே பதினாயிரம் பண்களை மனப்பாடம் செயதவர். பதினெட்டு வயதிலேயே சிறப்பாகச் சொற்பொழிவாற்றும் ஆற்றலுடையவராய் விளங்கினார். இவர் இயற்றியுள்ள வெண்பாக்கள் ஆயிரத்துக்கும் மேல் இருக்கும். வாரியார் சுவாமிகள், சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்த பாமரமக்களும் புரிந்துகொள்ளும்படியாக 500-இற்கும் மேற்பட்ட ஆன்மிக மணம் கமழும் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவர் இயற்றியுள்ள நூல்கள் ஏறத்தாழ நூற்றைம்பது ஆகும். அவற்றுள் சிவனருட்செல்வர், கந்தவேள் கருணை, இராமகாவியம், மகாபாரதம் ஆகியவை சிறப்பாகக் குறிபபிடத்தக்கவை. கேட்கும் செவிக்கும் கற்கும் சிந்தைக்கும் இனபம் பயக்கும் அவரது சொற்பொழிவுகளுள் 83 சொற்பொழிவுகள் குறுந்தகடுகளாக வந்துள்ளன. 1993 அக்டோபர் 19 ஆம் திகதி வாரியார் சுவாமிகள் லண்டன் பயணமானார். ஆன்மிகத்துக்காகவே பாடுபட்ட வாரியார் சுவாமிகள், 1993-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம திகதி விமானப் பயணத்திலேயே காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2014-16.09.2014



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**வரவு அறிந்து செலவு செய்தால்தான் வாழ்க்கை சிறப்பாக அமையும் என்று சொல்லும் கும்ப இராசி நேயர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும்!**

ஆவணிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சனி சகாய ஸ்தானாதிபதி செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே சென்ற மாதத்தைவிட இந்த மாதம் சிறப்பான மாதமாகவே இருக்கும் என்று சொல்லலாம். அதேநேரத்தில் இரண்டில் கேதுவும், அஷ்டமத்தில் ராகுவும் சஞ்சரித்து சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் உங்கள் ராசி அமைந்துள்ளது. வாக்கு ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வதே நல்லது. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான்.

எனவே சர்ப்ப சாந்தி பரிகாரங்களை முறையாகச் செய்தால், சந்தோஷமான வாழ்கக்கை அமைத்துக்கொள்ளலாம். அதே நேரத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசிக்கு இரண்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் பதிவாகிறது. இரண்டாம் இடம் என்பது வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் இடமாகும். பன்னிரண்டாம் இடம விரய ஸ்தானமாகும். ஒரே நேரத்தில் குரு பகவான் அந்த இரு கட்டங்களையும் பார்ப்பதால், வரவையும் கொடுத்துச் செலவையும் கொடுக்க காரணமாக இருப்பார். அதே நேரத்தில் சுபச் செலவுகளும் உருவாகும்.

இதுபோன்ற அமைப்பில் கிரக நிலைகள் இருக்கும் பொழுது வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது. அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கும் வாய்ப்பு உருவாகும். அதற்குரிய வரவும் முன்னதாகவே வந்து சேரும். குடும்பத்தில் நீண்ட நாளாகப் பேசி, பேசி விட்டுப்போன வரன்கள் இப்பொழுது கைகூடி வரலாம். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும்.

புதனின் பெயர்ச்சிக்குப் பின்னால் ஒரு சிலருக்கு உத்தியோகம், தொழில் போன்றவற்றில் மாற்றங்கள் உருவாகலாம். இடமாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகள் வரும பொழுது யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. தூர தேசத்திலிருந்து வரும் அழைப்புகளை திசாபுத்தி பலம் பெற்றவர்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் யோசித்து முடிவெடுப்பதே நல்லது. செவ்வாய், சனி சேரக்கைக்குப் பரிகாரமாக அங்காரகனையும், சனிபகவானையும் வழிபடுவது நல்லது.

## சுபச்செலவுகள் அதிகரிக்கும்!

என்னதான் செவ்வாய் மூன்று, பத்து ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருந்தாலும் பகைக் கிரகமான சனியோடு இணைவதால் சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் இனம்புரியாத கவலை மேலோங்கும். உடன் பிறப்புகளால் உற்சாகம் இழக்க நேரிடும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருக்க முடியாது போகலாம். கட்டடப் பணி பாதியிலேயே நிற்கும். இந்த நிகழ்வு ஆகஸ்டு 30 ஆம் திகதி வரை இருக்கிறது. அதன்பிறகு செவ்வாய் பெயர்ச்சியாகிறார். விருச்சிக செவவாயின் சஞ்சாரத்திற்குப் பிறகு வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**கன்னி ராசியில் புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்டு 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்தில் புதன் சஞ்சரிப்பது ஒரு வகைக்கு யோகம் தான் என்றாலும், ராகுவோடு இணைந்து சஞ்சரிப்பதால் முழுமையான பலனைக் கொடுக்க முடியுமா என்பது சந்தேகம்தான். அதே நேரத்தில் ராசிநாதனாகவும், விரயாதிபதியாகவும் இருக்கும் சனி உச்சம் பெற்றிருக்கிறார். குரு, சுக்ர சேர்க்கையும் உருவாகியுள்ளது. எனவே குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது. மருத்துவச் செலவுகள் உருவாகலாம். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். இது உன்னதமான காலமாகும். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுபவர்களுக்கு அது கை கூடும. இல்லம்தேடி நல்ல தகவல்கள் வந்து சேரும. சகோதர வர்க்கத்தினர் பகை மாறும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். பழைய தொழிலைமாற்றி புதிய தொழில் தொடங்க பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ளலாமா என்று யோசிப்பீர்கள்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி சிம்மத்தில் சுக்ரனும் சஞ்சரிக்கப்போகிறார். 4,9 இற்கு அதிபதியான சுக்ரன் 7 இல் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். கடிதம் கனிந்த தகவலைக் கொண்டு வந்து சேர்க்கும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள. இம்மாதம் சதுர்த்தியன்று ஆனைமுகப் பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் எண்ணம் மேலோங்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகள் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். அஷ்டமத்து ராகுவாலும், தனஸ்தானத்து கேதுவாலும் சுபச் செலவுகள் அதிகரிக்கும் நேரம் என்பதால் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்கி மகிழலாம். சர்ப்ப சாந்தி செய்வதன் மூலம் ஏற்ற இறக்கமில்லாத வாழ்க்கையைக் காணலாம். இடம் வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு ஏற்படும். சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகனை வழிபடுவது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**நட்பு வட்டத்தைப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பும் மீன இராசி நேயர்களே! வரவும் செலவும் சமமாகும்!**

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியில் கேது சஞ்சரிக்கின்றார். எனவே ஆன்மிக நாட்டம் அதிகரிககும். அடிக்கடி பயணங்கள் உருவாகும். குடும்பச் சுமை கூடுதலாக இருக்கிறதே என்று நினைப்பீர்கள். சப்தம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அதே நேரத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. எனவே மலைபோல் வந்த துயர் பணிபோல் விலகும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

அஷ்டமத்தில் சனி செவ்வாயோடு இணைந்திருப்பதால் கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படும். கொள்கைப் பிடிப்பை ஒரு சில நேரங்களில் தளர்த்திக் கொள்ள நேரிடும். ஆற்றல் மிக்கவர்களின் அனுசரிப்பு உங்களுக்குத் தேவை என்பதால் கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. திடீர் இடமாற்றம், வீடுமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் உருவாகலாம். ஒரு சிலருககு நாடுமாற்றங்களும், நீண்டதூரப் பயணங்களும் கூட ஏற்படலாம்.

ராசிநாதன் உச்சம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடிக்கடி தொல்லை கொடுத்து வந்த உடல்நலம் இனி சீராகும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. விலகுவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே நல்ல பலன்களை அள்ளி கொடுக்கும். இருப்பினும் சனிக்குரிய சிறபபு வழிபாடுகளை முறையாக மேற்கொள்வது நல்லது. அருகிலுள்ள ஸ்தலங்களுக்குச் சென்று அன்னதானம், சொர்ணதானம், வஸ்திர தானம் போன்றவற்றை இயன்றவரை செய்து வழிபட்டு வருவது நல்லது.

சனியின் ஆதிக்கக் காலத்தில் வாரந்தோறும் விக்னேஷ்வரர் வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வோருக்கு கெடுபலன் ஏற்படாது என்பார்கள். ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி ஆனைமுகப்பெருமானுக்கு உகந்ததாக அமைகின்றது. எனவே அந்த சதுர்த்தி நாளில விரதமிருந்து ஆனைமுகப் பெரும்ானை முறையாக வழிபட்டால் வருமானம் திருப்தி கரமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். எதிர்ப்புகள் அகலும். இல்லத்தல் இனிய சம்பவங்கள் நடைபெறும். மதிபபும, மரியாதையும் உயரும். மக்கட் செல்வங்களின் வளர்ச்சி கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

6 ஆம் இடத்தில் புதனும், சூரியனும் இணைந்து சஞ்சரிப்பது யோகம்தான். அரசு வழி உத்தியோகத்தை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். அரசியல் வாதிகளாக இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்டு 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். சப்தமாதிபதி சப்தம் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். பயணங்கள் அதிகரிக்கும். உதிரி வருமானங்கள் பெருகும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். கல்யாண வாய்ப்புகளுக்காக காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு பொற்காலம் ஆகும். 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 9 இல் பலம பெறுவது யோகம்தான். முன்னோர் வழி சொத்தில் ஒரு முறையான லாபம் கிடைக்கும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும. சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமிது. துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். இழப்புகளை ஈடுசெய்யும் விதத்தில் இந்த செவ்வாய்ப் பெயர்ச்சி உங்களுக்கு அமைந்திருக்கிறது. விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் செப்டம்பர் முதல் தேதியன்று சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகிறார. 8இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் செயற்படும். எனவே, திட்டமிடாது செய்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் பலவும் காண்பீர்கள். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். பதவியிலிருப்பவர்கள் பக்கபலமாக இருப்பர். வீடு கட்டும் முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு ஆகியவை எதிர்பார்த்தபடி கிடைக்கும. இம்மாதம் ஜென்ம கேதுவால் சிறப்பான பலனை கிடைக்க ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வாருங்க்ள். சப்தம ராகுவால் சஞ்சலம் ஏற்படாமல் இருக்க துர்க்கையை வழிபட்டு வாருங்கள.

## வரவும் செலவும் சமமாகும்!

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குரு பார்வையால் குழப்பங்கள தீரும் மாதமாகக் கருதலாம். தனாதிபதி செவ்வரய், விரயாதிபதி சனியுடன் இணைந்திருப்பதால் வரவு வந்த மறுநிமிடமே செலவாகும். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின்னால் சில நல்ல மாற்றங்களைக் காண்பர்கள். தாய்வழித் தனலாபம் உண்டு. கடன் சுமை குறையும் .நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் அகலும். உங்கள் பெயரிலேயே இடம், குழந்தைகளின் எதிர்கால நலனை கருதி சேமிக்கத் தொடங்குவீர்கள். சுக்ரப் பெயர்ச்சிக்குப் பின்னால் அதாவது மாதத்தின் பிற்பகுதியில் நினைத்தது நிறைவேறும். நிம்மதி கிடைக்கும். அனைததுக் காரியங்களிலும் இருந்த தடைகள் அகலும. ராகு-கேது வழிபாடு யோகம் சேர்க்கும். சதுர்த்தியன்று விநாயகரை வழிபடுவதன்மூலம் வெற்றியை வரவழைத்துக் கொள்ளலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய பிரதமர் மோடியின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை ஈ.பி.டி.பி வரவேற்கின்றது


## அமைச்சர் டக்ளஸ் கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தி அதை அடித்தளமாக கொண்டு நிரந்தர அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும் என்று இந்திய பிரதமரை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருப்பதை ஈ.பி.டி.பி வரவேற்கின்றது.

இவ்வாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அந்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொள்வதற்கு அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வை நோக்கி முன்னகர்வதற்கு இருக்கக்கூடிய ஒரே வழிமுறையாக 13ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னகர்வது தான். இதையே நாங்கள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக



மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகளிடமும், தமிழ் மக்களிடமும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் உங்களைச் சந்தித்த கூட்டமைப்பினரோ 13 ஆவது திருத்தத்தை அர்த்தமற்றது என்றும், அதை அமுல்படுத்தி தீர்வொன்றை நோக்கிச் செல்லமுடியாது என்றும் கூறிவருகின்றார்கள்.

இந்த நிலையில் அவர்களுடனான சந்திப்பில் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினருடனும் கூட்டுறவாக செயற்பட்டு பிரச்சினைக்கு தீர்வுகாண உழைக்க வேண்டும் என்று நீங்கள் கூறியிருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

அதேபோல் இலங்கையில் குறிப்பாக வடக்கு- கிழக்கில் இந்திய அரசால் முன்னெடுக்கப்படும் உதவிகளை தொடருவதாகவும், இவ் விவகாரங்களில் இந்திய அரசு தவறாமல் கரிசனையோடு செயற்படும் என்றும், இலங்கையில் தமிழ் மக்கள் நீதி, பாதுகாப்பு, சமத்துவம் பெற்று வாழ வேண்டும் என்றும் நீங்கள் கூறியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உங்களது வார்த்தைகள் தமிழ் மக்களுக்கு நிச்சயம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் என நம்புகின்றேன். உங்களின் பெறுமதி மிக்க ஆலோசனைகளை கூட்டமைப்பினர் சிரமேற்று செயற்பட வேண்டும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார். (இ)





மூன்று மாத கால இராணுவ பயிற்சியை முடித்துக் கொண்ட 36 தமிழ் இராணுவ வீராங்கனைகள் நேற்று முன்தினம் வெளியேறியுள்ளனர். இதனை முன்னிட்டு 22 ஆவது படைப்பிரிவின் தலைமை அலுவலகமான பிளான்ரன் பொயின்ற் முகாமில் அணிவகுப்பு நிகழ்வு இடம் பெற்று மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இருந்து இராணுவத்தில் இணைந்து கொண்டவர்கள் இவ்வாறு பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர்.

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...100 போட்டிகளில் விளையாடுவதே சாதனையாக கருதப்படும் நிலையில் இவன் 200 டெஸ்ட்கள் ஆடினாலும் ஆச்சரியப்படமாட்டேன் என்று தன் ரெக்கோர்டை முறியடித்த சச்சினை நேரில் பாராட்டி மகிழ்ந்தார் நீல் ஹார்வே. ரவிசாஸ்திரி இரட்டை சதம் அடித்திருந்தாலும், சச்சின் அடித்த சதம் மற்றும் அவனுடைய விளையாடும் அழகு ஆகியவையே அனைத்துப் பத்திரிகைகளிலும் தலைப்புச் செய்தியாக வந்திருந்தன. சச்சினின் விளையாட்டு ரம்மியமானது. காண்பதற்கு அழகானது. மிக மிக திறமையான இவனது ஆட்டத்தைக் கண்டால் ஒரு வகையில் பயமாக இருக்கிறது. இந்தச் சிறிய வயதிலேயே எதிர் அணியினருக்கு சிம்ம சொப்பனமாக விளங்குகிறான் என தி ஏஜ் ஆஸ்திரேலியன் மற்றும் விஸ்டன் கிரிக்கெட் மாத இதழ் ஆகிய பத்திரிகைகள் சச்சினைப் புகழ் மழையில் குளிப்பாட்டி விட்டன. ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டிகள் இன்னும் முடிவு பெறாத நிலையில் இந்தியா, ஆஸ்திரேலியா, மேற்கு இந்திய அணிகளுக்கு இடையேயான மூன்று நாடுகள் உலக தொடர் கோப்பை ஏற்பாடாகியிருந்தது.

1985-86 இல் நடந்த போட்டிகளில் இந்தியா தோல்வி அடைந்தது நினைவிருக்கலாம். அதே போல் 1975 மற்றும் 1979 இல் உலகக் கோப்பையை வென்றிருந்த மேற்கு இந்திய அணிதான் மீண்டும் ஜெயிக்கும் என பலர் பந்தயம் கட்டியிருந்தனர். ரிச்சிரிச் சாட்சன் தலைமையில் மேற்கு இந்திய அணி வந்திறங்கியது. ஆனால், ஸ்டார் பேட்ஸ்மென் விவியன் ரிச்சர்ட்ஸ் அந்த அணியில் இல்லை என்பது பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அனுபவம் மிக்க ஹேன்ஸ் மற்றும் மார்ஷல் ஆகியோர் ரிட்டையர் ஆகும் நிலையில் இருந்தனர். இப்போது கொடிகட்டிப் பறக்கும் பிரையன்லாரா அப்போது இன்னும் மலராத மொட்டாக இருந்தார்.



ஆஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகை கள் அனைவரும் சச்சினைப் பாரா ட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன் னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்கு கள் அனைத்து சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரி யவே இல்லை என்றார். ஆஸ்திரே லிய கேப்டன் பார்டரோ, 19 வயதி லும் இவன் இந்தப் போடு போட்டால் 25 வயதில் என்ன செய்வானோ என் பதை நினைத்தால் உதறலாக இருக் கிறது என்றார்.ஆஸ்திரேலிய வானொலிவர்ணனையாளர் டிம் லேன் ஒருபடி மேல்சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன், இவன் எது வேண் டு மானாலும் செய்வான் என்றார்.

6 டிசம்பர் 1991 ஆம் ஆண்டு மூன்று நாடுகளுக்கான போட்டி பெர்த்தில் துவங்கியது. மொத்தம் 8 லீக் மற்றும் 2 அரை இறுதிப்போட்டிகளில் இந்தியா பங்கேற்றது. முதல் போட்டி இந்தியாவிற்கும் மேற்கு இந்திய தீவுகளுக்கும் இடையே சச்சின் 1 ரன்னில் ஆட்டம் இழக்க சாஸ்திரி 33 ரன்கள் எடுக்க வழக்கம் போல் 110 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார். இந்தியா 126 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. மேற்கு இந்தியத் தீவுகள் களம் இறங்க அவர்கள் எடுத்த ரன்கள் எவ்வளவு தெரியுமா? அதே 126 ரன்கள் ஆக, ஆட்டம் டை என்று அறிவிக்கப்பட்டது. இந்தப்போட்டி நடப்பதற்கு முன்பு அதுவரை மொத்தம்

### இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன்

692 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றன. அவற்றில் ஒன்றுகூட இதுபோல் டையில் முடியவில்லை. டையில் முடிந்த முதல் போட்டி இதுதானாம். எனவே, புள்ளிகள் இரு நாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டன. இந்தியாவுடனான போட்டியில் மேற்கு இந்தியத் தீவுகள் 8 விக்கெட்டுக்களுக்கு 175 ரன்கள் எடுத்திருந்தன. சச்சின் 57 ரன்கள் எடுத்து ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குச் செல்ல வழிவகுத்தார். ஆட்ட நாயகன் விருதையும் சச்சின் பெற்றார். மெல்போர்னில் நடைபெற்ற முதல் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா சுலபமாக வெற்றிபெற்றது. அடுத்து சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது இறுதிப் போட்டிதான் கடுமையாக இருந்தது. இதில் சச்சின் மிகப் பொறுப்பாக ஆடினார் என்றுதான் கூறவேண்டும். 100 பந்துகளில் 69 ரன்கள் எடுத்து அவுட் ஆனார். கடைசி ஓவரில் 13 ரன்கள் எடுத்தால் மட்டுமே வெற்றி என்ற நிலையில்தான் பிரபாகர் மற்றும் பண்டிட் ஆகியோர் ஆடினர். ஆனால், மொத்தம் 6 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இந்தியா ஆறு ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. ஆஸ்திரேலியா உலக தொடர் கோப்பையைத் தட்டிச்சென்றது.

கே. ரமேஷ்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்தில் 500 பேர் டெங்கு நோயாளர்கள்

நாட்டில் ஒவ்வொரு வாரமும் சராசரியாக 500 டெங்கு நோயாளர்கள் இனம்காணப்படுகின்றனர். மழைகாலம் தொடங்கியுள்ளதால் இந்த நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என எச்சரித்திருக்கிறார் தொற்று நோய்ப் பிரிவின் தலைவர் டாக்டர் பபா பலிதஹவாட்.

சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி இந்த ஆண்டில் மட்டும் 58 பேர் டெங்கு நோயால் மரணமடைந்தனர் எனத் தெரிவித்த அவர் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்து பரவும் இடங்களை இனங்கண்டு பெருகும் நுளம்புகளை அழிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறினார்.

மழைகாலம் தொடங்கி விட்டதால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வரும் 29, 30 ஆம் திகதிகளில் விசேட திட்டங்களை நாடு முழுவதும் மேற்கொள்ள ஜனாதிபதி செயலணியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் மேல் மாகாணத்திலேயே 60 வீதமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த அவர் கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்து விட்டது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# இன ஐக்கியத்தை இல்லாதொழித்த ஜனாதிபதி மஹிந்தவின் குடும்பம்

**தெவரப்பெரும எம்.பி ஆதங்கம்**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் அதிகாரத்திற்காக இன ஐக்கியம் உட்பட அனைத்தும் இல்லாமல் போயுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சத்தமிட்டது போதும் என்று தோன்றுகிறது. அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்கள் குறித்து பலமாக குரல் கொடுத்தேன். ஆனால் ஏதாவது நடந்ததா?

நாடாளுமன்றத்தில் இந்த சம்பவங்கள் பற்றி பேசினேன். விசாரணை நடத்துவதாக கூறினார்கள். விசாரணைகளுக்கு என்ன நடந்தது? நாட்டில் சட்டம் என்று ஒன்று அமுலில் இல்லை.

இனங்களுக்கு இடையில் ஐக்கியமில்லை. ஒரு குடும்பத்தின் அதிகாரத்திற்காக நாட்டில் சகலமும் இல்லாமல் போய்விட்டது என தெவரப்பெரும ஆதங்கப்பட்டுள்ளார். (இ)

# தோல்வி அச்சத்தினால் ஓடித்திரியும் அரசாங்கம்

## ஐ.தே.க.கிண்டல்

அரசாங்கம் மூன்று இன மக்களின் வாக்குகளையும் இழந்து விட்டதாக ஜே.வி.பியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்காது, முஸ்லிம் மக்களின் வாக்குகளும் கிடைக்காது, சிங்கள பௌத்த வாக்குகளையும் அரசாங்கம் இழந்து விட்டது.

அது மாத்திரமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் ஆதரவையும் மகிந்த அரசாங்கம் இழந்து விட்டது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவும் அரசாங்கத்திற்கு இல்லை. இதனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஏற்படப் போகும் தோல்வியில் இருந்து தப்பிக்கவே நாட்டை அபிவிருத்தி செய்யும் நீல அலை என்ற பிரசாரத்தை முன்வைத்து அரசாங்கம் நாடு முழுவதும் ஓடித் திரிகிறது.

அரசாங்கம் எந்தளவுக்கு பயந்து போய் இருக்கின்றது என்பதை இந்த ஓட்டம் காட்டுகிறது எனவும் லால்காந்த கடுமையாக சாடியுள்ளார்.(இ)

# அமெ.செய்தியாளருக்கு விசா வழங்குவது நிறுத்தி வைப்பு

புதுடில்லியை தளமாகக் கொண்ட அமெரிக்கா செய்தியாளர் ஒருவருக்கு விசா வழங்குவதை இலங்கை வெளிவிவகார அமைச்சு பிற்போட்டுள்ளது.

செய்தியாளரான காடினர் ஹாரிஷ், புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரம் ஊடாக விசாவுக்கு விண்ணப்பித்துள்ளார். எனினும், இதுதொடர்பில் இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

குறித்த செய்தியாளரின் விசா விண்ணப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது. எனினும், அது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன ஜனாதிபதி மற்றும் ஜப்பானிய பிரதமர் ஆகியோரின் விஜயங்களும் இடம்பெறவுள்ள இந்த நிலையில் இலங்கைக்கு எதிரான செய்தி அறிக்கைகளுக்காக விசா கோரப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனினும் அமெரிக்க செய்தியாளரின் விசா விண்ணப்பம் நிராகரிக்கப்படவில்லை. அது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த செய்தியாளர், அளுத்கம வன்முறை தொடர்பாக செய்திகளை சேகரிக்கவுள்ளதாக தமது விசா விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் கலாநிதி என்.வி.எம். நவரத்தினம் மற்றும் என்.பரந்தாமன், வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் எஸ்.மகேந்திரன், கெஞ் சிரா எஸ்.விமலர்சங்கர் ஆகியோர் வழங் கவுள்ளனர்.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் மீண்டும் பிறவாமை வேண்டும் எனும் தலைப் பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### தெய்வீக் கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீககலையரங்கு வரிசையில் இன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நல்லை ஆதீனத்தில் சுந்தரமூர்த்தி சோபிதாஸ் வழங்கவுள்ள வயலின் கச்சேரி இடம்பெறவுள்ளது.

### இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் அக்கினி பிரவேசம் எனும் தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

### இசை நிகழ்ச்சி


நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும்மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் பிரம்ம ஸ்ரீ தி.ஸ்ரீ சந்திரமௌலீகரசர்மா வழங்கவுள்ள மிரு தங்க இசை சமர்ப்பணம் இடம்பெறவுள்ளது.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற் பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் பிரமச்சாரி ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள் வழங்கவுள்ள பாதம் தொழுவர் பாவம் தீர்ப்பர் என்னும் சொற் பொழிவும் நவாலி ராஜராஜேஸ்வரி அறநெறிப் பாடசாலை, அராலி அம்பிகை அறநெறிப் பாடசாலை, உடுவில் ராஜராஜேஸ்வரி அறநெறிப் பாடசாலை, வசாவிளான் கோசலை அறநெறிப் பாடசாலை, மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். இன்றைய விசேட காலை நிகழ்வாக நல்லூர் பஜனைக் குழுவினரின் பஜனை இடம்பெறும். (இ)

# நல்லூரான் திருவடிக்கு இன்று தீர்த்தத் திருவிழா



## வேலவனின் புகழ் பாட அருள் வேண்டும்



வேலவனின் புகழ்பாடும் கிளியாக வேண்டும்
நல்லை வேலவனின் புகழ்பாடும் அருளாசியாக வேண்டும் திருப்புகழ் ஆக வேண்டும்
வேலவனை நினைந்து எழுந்தாடும் சேவற் கொடியாக வேண்டும்
வேலவன் புகழ் பாடும் வண்ணம் புறா வாக வேண்டும்.

மகேந்திரன், நல்லூர்

## நல்லை முருகா!

மூவிரு பொறியாகி முன் வந்த அக்கினியையும் தீச்சு அடுத்த வந்த
மூவுலகு போற்றும் கங்கையையும் கதிகலங்க வைத்துச்
சரவணையில்
மூழ்க விட ஆறு சேயாய் அவதரிக்க உமை
மகிழ்தொன்றாயணைத்திட
மூவாயிர முக்கோடி தேவரு மகிழ ஓருருவில் ஆறுமுகத்துடனான
நல்லை முருகா!
ஆறுமுகனே! அமரர்களைச் சிறை மீட்கவென அசுரர்களை
சங்காரஞ் செய்ய அமரர்புடை சூழ
ஆறுமுகமும் ஆறுருவாகச் சக்திவேல் அன்னையிடம் பெற்றுத் தம்பி
வீரபாகுவோடு
ஆறுநாளாக அரக்கர்களான முச்சூரர்களை அழித்து மயில்
வாகனனாய் சேவல்க் கொடியோனாய்
ஆறுபடை வீடு கொண்ட வேல் முருகா! நல்லையை ஏழாம் படை
வீடாக ஆளும் நல்லை முருகா!

திருமதி ந.சந்திரா, தச்சன்தேப்பு


## கார்த்திகை நாயகனே வருவாய்!



நல்லையின் நாயகனே! ஐயா
வார்த்தைகள் இல்லை உனைப்பாட
கீர்த்திகள் பலதருவாய் சிவபாலா– நீ
பார்த்தால் வல்விளைகள் ஓடிவிடும்
எல்லையிலாத் துன்பம் அடைந்து விட்டோம்
கல்லைக் கனியாக்கும் காருண்ய மூர்த்தி நீ
வல்லமை தருவாய் வளம்பெற வாழ
நல்லையின் நாயகனே நலிந்தோரைக் காத்திடையா

க.ந.பாலசுப்பிரமணியம், ஏழாலையூர்.

## அருள் கூறு முருகா!



ஆறுமுடியாட ஆறுமுகம் மாட
ஆரவடமாட வரைபோலி
ஆறுபுறமாட ஞான அருள் ஊதி
ஆறு விழியாட நகையாட
வேதபரநாதகீத கடலாட
வேடுவ குமரி வலமாட
ஞானத்தனுயோகி சேரும் நல்லை யழில்
நாளும் அருள்சுறும் பெருமானே.

கலாபூஷணம் இ.சரவணபவன், வட்டுக்கோட்டை

## நல்லருளைப் பொழிபவனே

கந்தனே கடம்பனே காக்கவந்த வேலனே
கலியுகத்தின் தெய்வமே கார்த்திகைப் பெண் மைந்தனே
மால் மருகர் முருகோனே மயிலேறி வருவோனே
மாலையிட்டு தேவசேனா வள்ளி கரம் பிடித்தவனே கந்தனே
கடம்பனே
நல்லூரில் அமர்ந்தவனே நல்லருளை பொழிபவனே
நல்லவரம் தருபவனே
நால் வேத பொருளுணர்த்தி செந்தமிழை வளர்த்தவனே
ஞாலமெலாம் புகழ் பெற்ற நல்லூரின் ஞானவேலே

ஜயசிவம், கிளிநொச்சி.

## நல்லைக் கந்தன் நனிவெண்பா



கற்சிலையென் றுரைத்திடினும் கற்பனையென் றுரைத்திடினும்
பொற்பதனே நீதான் புவியெல்லாம்– நற்பதத்தை
நல்லூர்ப்பதிநாடி நல்லருளைப் பெற்றுயர்ந்தோர்
இல்லையென மாட்டார் இனி.

கலாபூஷணம் சந்தக் கவிஞர்
நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக மரபுகளைக் காப்போம்!



நாடாளுமன்றம் புனிதமானது, இந்த நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய அந்த மன்றம் அரசியல் கட்சி மேடையைப் போல ஆக்கி, ஒவ்வொரு நாளும் உறுப்பினர்கள் எழுந்து அவையின் மையப் பகுதிக்குச் சென்று கூச்சலிடுவதும், அவைத தலைவர் அவையை சில மணி நேரங்கள், அல்லது ஒருநாள் முழுவதும் ஒத்தி வைப்பதும் நடக்கும் நிகழ்ச்சியாக ஆகிவிட்டதை உணர்ந்த இந்திய குடியரசுத் தலைவர் வேதனையுடன் சொல்லி, ஆங்கில செய்தித் தாளொன்றில் வெளியான செய்தி இது.,

“நாடாளுமன்றத்தில் ஒரு அறையில் இடம்பிடிப்பதற்காக திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும், தெலுங்கு தேசக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் மோதிக் கொண்ட செய்தி வெளியான அதேநேரத்தில் இந்திய குடியரசுத் தலைவர உணர்வுபூர்வமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார். புனிதமான அவையின் கௌரவத்தையும், மரியாதையையும் காக்க வேண்டிய கடமை ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு என்கிறார் அவர்.

சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் விருதை வழங்கிப் பேசுகையில் அவர் இவ்வாறு சொல்கிறார்: “இறைவன் பெயரால் கேட்கிறேன், உங்களைத் தவிர வேறு யாரால் முடியும். நமது நாட்டின் உயர்ந்த கௌரவமிக்க அவையின் மரியாதையைக் காக்க வேண்டிய கடமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், அவைக்கு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் நிச்சயம் உண்டு.”

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி சொல்கிறார், பிரதமர் நரேந்திர மோடி பொதுத தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று பதவி ஏற்புக்காக நாடாளுமன்றத்துள் முதன்முதலாக நுழைகின்றபோது மன்ற கட்டடத்தின் வாயிற்படியில் தன் தலையை வைத்து வணங்கிவிட்டு காலடி எடுத்து வைத்ததை நினைவுகூரந்து இந்த மன்றத்தின் பெருமை, கௌரவம் ஆகியவற்றுக்கு அவர தந்த மரியாதையை எண்ணி தான் பெருமிதம் அடைந்ததாகச் சொல்கிறார்.”

இந்த வார “துக்ளக்” இதழில் வேலூரில் புகழ்மிக்க ஒரு பொறியியல் கல்லூரியை நடத்தும் திரு ஜி.விஸ்வநாதன் அவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி பற்றிய விவரம் வெளியாகியிருக்கிறது. அவர் 1967 முதல் பத்து ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். முதன்முதலாக அவர் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவருக்கு வயது 28. அவர் சொல்கிறார்: “நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகுதான் முதன் முதலாக டெல்லிக்குப் போனேன். அந்த காலகட்டத்தில் அங்கு நிறைய தலைவர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆச்சார்ய கிருபளானி, ராம் மனோகர் லோகியா, பிலு மோடி, வாஜ்பாய், ஜோதிர்மாய் பாசு, இந்திரஜித் குப்தா என பல தலைவர்கள் அப்போது அவையில் உறுப்பினர்களாக இருந்தார்கள். அப்போது “புதன்கிழமை கிளப்” என்ற ஒரு அமைப்பு இருந்தது. அங்கு எல்லோரும் வருவார்கள், அனைவரும் கலந்து பேசுவோம், நல்ல தொடர்புகளை அது உருவாக்கிக் கொடுத்தது.”

இப்படித் தன் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டு வரும் திரு ஜி.விஸ்வநாதன் தன்னுடைய நாடாளுமன்ற நாட்கள் மிகச் சிறந்த நாட்களாகச் சொல்கிறார். அவர் உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் அதாவது, 1967 முதல் 1977 வரையிலான காலத்தில், அவர் பார்த்த வரையில் ஒரு முறைகூட அவையின் மையப பகுதிக்குச் சென்று உறுப்பினர்கள் கூச்சலிட்டது கிடையாது என்கிறார். காங்கிரஸ் கட்சி ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்று இரண்டாக உடைந்த நிலையில்கூட அப்படிப்பட்ட நிகழ்வுகள் நடந்ததில்லையாம். ஜோதிர்மாய்பாசு, மதுலிமாயி போன்ற தலைவர்கள் அவையில் அரசாங்கத்தை எதிர்த்து மிகக் கடுமையாகப் பேசுவார்கள். இந்திரா காந்தியைப் பார்த்து “நீங்கள்தான் ஊழலைத் தோற்றுவித்ததற்கு முக்கிய காரணம்” என்று கடுமையாக நேரடியாகத் தாக்கிப் பேசிய தலைவர்களை எனக்குத் தெரியும் என்கிறார்.

அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இந்திரா காந்தி தன்னைப் பற்றி குற்றம் சாட்டும் உறுப்பினரைப் பார்த்துச் சீறியதில்லை. மென்மையான புன்னகையுடன் அந்த விமர்சனத்தை அவர் எதிர்கொணடார். கோபப்படாமல், மென்மையாக குற்றச் சாட்டுகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

தொடக்க காலம் முதல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அருமையான சூழல் அது என்கிறார் அவர். சபாநாயகரை எதிர்த்துக் கூச்சல் போட்டு, ஆர்ப்பாட்டம் பண்ணும் கலாச்சாரம் எல்லாம் அப்போது இல்லை, குறந்தபட்ச பொதுப் பணபு அபபோது இருந்தது என்று சொல்லியிருக்கிறார் ஜி.விஸ்வநாதன்.

இப்படிச் சொல்லிவிட்டு அவர் இடைக்காலத்தில் அந்தப் பண்பு சற்று மாறுபட்ட திசையில் போனாலும், திரும்பவும் பழைய பண்பட்ட சூழ்நிலை திரும்பும் என்று கருதுகிறார் அவர். கடந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரின் செயறபாடுகளில் மக்களை திகைக்க வைத்த செய்தி சோனியா காந்தியின் புதல்வர் ராகுல் காந்தி எழுந்து அவையின் மையப் பகுதிக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு வெளியேறி, அங்கு பத்திரிகையாளர்களிடம் அவையில் ஒரே ஒரு குரல் மட்டும்தான் கேட்கிறது. மற்ற குரல்களுக்கு அங்கு இடமில்லை என்பதுபோல சொல்லியிருப்பதுதான். இதில் என்ன புதுமை இருக்கிறது. அனேகமாக எல்லா கட்சி உறுப்பினர்களுமே அப்படித்தானே நடந்து கொள்கிறார்கள் என்று கேட்கலாம். ஆனால் நன்கு கவனித்துப் பார்த்தீர்களானால், கட்சியின் மேல்மட்ட தலைவர்களாக இருப்பவர்கள் தங்கள் இருக்கையின் அருகில் நின்றுகொண்டுதான் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவார்கள், சாதாரண உறுப்பினர்கள்தான் அவையின் நடுப்பகுதிக்குச் செல்வது, கோஷங்கள் இடுவது, பதாகைகளைக் காட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். ஆனால், இங்கு இந்த நாட்டின் பிரதமர் பதவிக்குத் தயார் செய்துகொள்ளும் ராகுல் காந்தி இப்படி இறங்கி வந்து ஒரு கீழ்மட்ட தொண்டர்போல நடந்து கொண்டது நாட்டு மக்களுக்கு அதிர்ச்சியைத்தான் அளித்தது.

பொதுவாக தலைவர் எவ்வழி, தொண்டனும் அவ்வழி என்பார்கள். தலைவர்கள் வழிகாட்டிகளாக, ஆதர்ச உறுப்பினராக நடந்து கொண்டால்தான், தவறான செயறபாட்டில் இறங்குகின்ற தொண்டன்கூட தலைவர் ஏற்றுக கொள்ள மாட்டார் என்று தவறான காரியங்களைச் செய்ய தயங்குவான்.

பொதுவாக நாட்டில் நடக்கும் ஹர்த்தால், பந்த், கடையடைப்பு, வேலை நிறுத்தம் போன்ற சமயங்களில் தொண்டர்கள்தான் தெருத் தெருவாகச் சென்று அலம்பல் செய்வார்களே தவிர, தலைவர்கள் அவரவர் அலுவலகத்திலிருந்து கொண்டு நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஒரு குடிசை வீட்டில் ஏராளமான குழந்தைகளோடு வசித்து வந்த பெரியவரைப் பார்த்து ஒருவர் கேட்டார்: உங்கள் வீட்டிலிருக்கும் இத்தனை குழந்தைகளில் யார் நல்ல குழந்தை என்று. அதற்கு அவர் பதில் சொன்னாராம், அதோ பாருங்கள் குடிசையின உச்சியில் நெருப்பு வைத்துக் கொண்டிருக்கிறானே அவன் தான் நல்ல குழந்தை என்றாராம். அப்படியொரு நல்ல குழந்தையாக இருப்பது நல்லதா? அல்லது நாட்டுக்கு வழிகாட்டும் நல்ல பிள்ளை என்று நாட்டு மக்கள் மனதார, உளமார வாழ்த்துவது நல்லதா?

ஜனநாயக நாட்டில் ஒரு கட்சி வெற்றி பெற்றால் மற்ற கட்சி தோற்பது நடக்கக்கூடியதுதான். மறுபடி தோற்ற கட்சி பதவிக்கு வருவதற்கு என்ன வழி என்று ஆக்கபூரவமாகச் சிந்தித்து, அதற்கேறப தங்கள் பணிகளை முடுக்கிவிட்டு, மக்கள் நலனில் அக்கறை கொண்டு, மக்களின் நம்பிக்கையைப் பெற முயற்சிப்பதைவிட்டு இதுபோனற சிறுபிள்ளைத்தனமான முயற்சிகள் மறுநாள் செய்தித் தாள்களில் பரபரப்பாக செய்திக்கு வழிவகுக்க முடியுமே தவிர மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தாது.

பிரதமர் நரேந்திர மோடி தன்னுடைய ஒவ்வொரு செயலிலும், பேச்சிலும் கண்ணியத்தையும், ஒழுங்கையும், நாட்டு நலனே மற்ற எல்லா நலன்களுக்கும் மேலானது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லியும் நடந்து காட்டியும் வருகிறார்.

குடியரசுத் தலைவர் பிரணாப முகர்ஜி குறிப்பிட்டுள்ளதைப் போல, மோடி நாடாளுமன்றத்துக்கும், இந்திய ஜனநாயகத்துக்கும் எந்த அளவு மரியாதை தருபவராக இருந்தால் எத்தனையோ உறுப்பினர்கள் அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக கடந்து வந்த வாயில்படியில் தன் தலை வைத்து வணங்கிவிட்டு உள்ளே காலடி எடுத்து வைத்திருப்பார். அதுதான் பண்பாடு. அந்தப் பண்பாட்டையும், ஜனநாயகத்தின் மீதுள்ள பிடிப்பையும் தனது நடவடிக்கைகள், செயற்பாடுகள், முடிபுகள் ஆகியவற்றில் காட்டுவது ஒன்றுதான் உண்மையான ஜனநாயக மரபாக இருக்க முடியும்.

இனி வருங்காலங்களிலாவது நாடாளுமன்றம் கட்சிகளுக்குள், உறுப்பினர்களுக்குள் என்ன அபிப்பிராயபேதம், ஆதரவு அல்லது எதிர்ப்பு என்றாலும் நியதிப்படி தங்கள் ஆதரவு அல்லது எதிர்ப்பைக் காட்டும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமேயல்லாமல், அவையை நடத்த விடாமல் தடுப்பதும், அவைத் தலைவர் ‘ப்ளீஸ்’ எனும் சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடு வரலாம், ஆயிரம் பேருக்கிடையிலும் வரலாம், அப்படி வரும் வேறுபாட்டை முறைப்படி முடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் எல்லா அமைப்புகளிலும், ஏன் நாடாளுமன்ற விதிமுறைகளிலும்கூட வகுத்திருக்கிறார்கள்.

அதனைப் பின்பற்றுவது என்ன் அத்தனை கடினமா? முதலில் தலைவர்கள் வழிகாட்டினால், மற்றவர்கள் தாங்களாகவே அதனைப் பின்பற்றுவார்கள் என்பது திண்ணம்.

இந்திய ஜனநாயகம் ஆல்போல் வளர்ந்து அருகுபோல் வேரோடி நிலைக்க வேண்டிய ஜனநாயகம் உலகத்துக்கொரு புதுமை இது. அதனை அத்தனை எளிதில் அழிந்துபோக விட்டு விடலாமா?

*-இணையம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைப்பாட்டை மாற்றாத இந்திய மத்திய அரசு!

## உறுதிப்படுத்திய ஷேசாத்திரி

இலங்கையில் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு குறித்த பேச்சுக்களை முன்னெடுக்கும்படி இந்தியப் பிரமதர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்குப் பின்னர் இந்திய அரச தரப்பு தெரிவித்திருக்கிறது.

ஆட்சி மாறினாலும் இந்திய அரசின் வெளியுறவு கொள்கையில் மாற்றமில்லை என்பதையே இந்தச் செய்தி எடுத்துக்காட்டுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய வெளிவிவகாரத்துறை கொள்கைப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சாரி ஷேசாத்திரி ராமானுஜன் தெரிவித்திருப்பவை வருமாறு, இந்திய அரசு மாறிவிட்டது என்பதற்காக இலங்கை குறித்த வெளி விவகார நிலைமை மாறும் என்று சொல்லமுடியாது.

13 ஆவது திருத்தம் என்பது இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள ஒரு குத்துப்பாடு. இந்தத் திருத்தத்துக்குள் என்ன வுள்ளதோ அவற்றைத்தான் பேச வேண்டும் தீர்வுகாண வேண்டும். இதற்கு கொழும்பு அரசு தயாராகவே இருக்கிறது.

தமிழ் கட்சிகள் அதற்கு தயாராக வேண்டும். நாம் எப்போதும் கொழும்பு அரசுக்கு சொல்வது 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில்தான் தீர்வு காணவேண்டும் என்று. இப்போது அந்த எண்ணத்தை மாற்ற முடியாது, மாற்றவும் கூடாது. 13 ஆவது திருத்தத்தில் ஒன்றுமல்லை என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு பேச முடியாது.

அதில் என்ன பிரச்சினையுள்ளது, என்ன திருத்தம் கொண்டு வர வேண்டும் என்பது குறித்து ஆராய வேண்டும். இலங்கை அரசு ஒன்றும் செய்யமுடியாது. அவர்களுக்கு காலம் தேவைப்படுகிறது.

தமிழ் கட்சிகள் சொல்வது எல்லாம் சரி என்று இல்லை. இலங்கை அரசுக்கும் சில வாதங்கள் இருக்கின்றன. அவர்கள் உட்கட்டுமான அபிவிருத்திகளைச் செய்திருக்கிறார்கள். எனவே அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று கூற முடியாது. ஆனாலும் சிலவற்றை செயது விட்டார்கள் என்பதற்காக மக்களுக்கு தேவையான அனைத்தையும் செய்துவிட்டார்கள் என்றும் சொலலமுடியாது. எனவே தீர்வு விடயத்தில் தமிழ்க்கட்சிகளும், அங்குள்ள வேறு மாற்றுக் கட்சிகளும் முன வரவேண்டும். இது போல இலங்கை அரசும் முன்வர வேண்டும். இப்படியான சந்தர்ப்பத்தில் பேச்சு நடத்தினால் இலங்கைப் பிரச்சினை யைத் தீர்த்துவிடலாம். வெளி நாடடு விவகாரங்களில் மத்திய அரசே முடிவுகளை எடுக்கும். தமிழக அரச தலைவர்களின் ஆலோசனை பெற வேண்டும் என்ற அவசியம் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தா. (இ)

# இலங்கை அரசிற்கு எதிராக அமெரிக்கா செயற்படாதாம்

## பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக செயற்படவில்லை இனி மேலும் செயற்படாது என அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரிய வசம் தெரிவித்துள்ளார்.



மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பிலேயே இலங்கை குறித்து கருத்து வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் சிறந்த உறவுகள் நீடித்து வருவதாகத் தெரிவிதது ள்ளார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் இலங்கை இராஜதந்திரிகள் அமெரிக்க அதிகாரிகளுடன் அடிக்கடி சந்திப்புக்களை நடத்தி வருவதாகவும் இலங்கை தொடர்பில் அமெரிக்கா புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், தமிழக அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக இலங்கை எதிர்கொள்கைகளை பின்பற்றி வருவதாகவும் தமிழகத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றங்களையும் காண முடியவில்லை என அவர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

### தொலைபேசியில் மறைத்து தங்கம் கடத்திய இலங்கையர்

11 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரண்டு தங்க கட்டிகளை, இரண்டு அலை பேசிகளில் மறைத்து இந்தியாவின் சென்னை நகரத்திற்கு கடத்த முயன்ற இலங்கையர் ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கந்தானை பிரதேசத்தை சேர்ந்த 35 வயதானவர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# சுற்றுலா விசாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடிச்செல்லாதீர்

சுற்றுலா அல்லது மாணவர் விசாக்களின் மூலம் தொழில் வாய்ப்பு தேடிச் செல்ல வேண்டாம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மக்களிடம் கோரியுள்ளது.

மாணவர் அல்லது சுற்றுலா விசா மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து சில வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் மக்களிடம் பணம் பறித்து வருகின்றன. இவ்வாறு தொழில் வாய்ப்பு தேடிச் செல்லும் நபர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடுகின்றது. டுபாய், மலேசியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு இவ்வாறு சுற்றுலா அல்லது மாணவர்விசாக்களின்மூலம்தொழில் வாய்ப்பு தேடிச் செல்கின்றனர்.

இவ்வாறு தொழில் வாய்ப்பு தேடிச் செல்வோர் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் பொறுப்பு சொல்லாது.

மக்களை ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வரும் போலி வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான போலி வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கோரியுள்ளது. (இ)

# போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு பேணும் அரசியல்வாதிகள்!

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புகளைப் பேணி வரும அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரகசியமான முறையில் இவ்வாறு அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரச புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்பும் இந்த விசாரணைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அண்மையில் பொலிஸார் மற்றும் சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்ட போதைப் பொருட்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இதன் பின்னணியில் அரசியல் வாதிகளுக்கு தொடர்பு உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சில போதைப்பொருள் வர்த்தகர்கள் அரசியல்வாதிகளுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்களின் போது போதைப் பொருள் வர்த்தகர்கள் அரசியல் வாதிகளுக்கு பணம் செலவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# இன்று ஒரு தகவல்

## அந்த ஐந்துபேர்!

'இவர் மாதிரி இந்த உலகத்தில் வேறு எவரும் இருக்க முடியாது. இவர் கோடியில் ஒருவர்' என்று சில பேரை அறிமுகப்படுத்துவது உண்டு.

இந்த உலகத்தில் அபூர்வமான அருமையிலும் அருமையானவர்கள் ஐந்துபேர் உண்டு என்கிறார் கிருபானந்த வாரியார். யார் அந்த ஐந்து பேர்?

தனது பொருளின் கெடுதியையும் கூறும் வியாபாரி! புகழை விரும்பாத கொடையாளி! மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்கும் வணிகர். எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர். தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் குற்ற வாளி!

இந்த ஐந்து பேரும்தான் அருமையிலும் அருமையானவர்கள்.

தன்னுடைய பொருளின் கெடுதியைக்கூறும் வியாபாரி யாராவது உண்டா?

உளுத்தம் பருப்பு ஒரு கிலோ கொடுங்க – என்று கேட்கிறீர்கள். 'வேண்டாம் சார்... எங்கள் கடையில் இருக்கும் உளுத்தம்பருப்பு நல்லதல்ல! எதிரில் ஒருவன் கடைவைத்திருக்கிறான். அந்த கடையில் இருப்பது நல்ல தரமானது! அங்கேபோய் வாங்கிக்கொள்ளுங்கள்!' என்று யாராவது சொல்வார்களா? சொன்னால் 'அந்த ஆளுக்குப் புத்தி மாறிவிட்டது போல' என்று தான் நினைப்போம்!

அதேமாதிரி தான் புகழை விரும்பாத கொடையாளி! இந்தக் காலத்தில் கொடையாளி ஆவதே புகழுக்காகத் தான்!

இடதுகை கொடுக்கிறது வலது கைக்குத் தெரியக்கூடாது என்பார்கள். ஆனால், இன்றைக்கு எதைக் கொடுத்தா லும் இரண்டு கைகளாலும் சேர்த்துக் கொடுத்துத்தான் போட்டோ பிடிக்கிறோம். இடதுகை வாங்கிறது வலது கைக்குத் தெரியக்கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம் அது இந்தக் காலத்துக்குப் பொருத்த மாக இருக்கும்!

மூன்றாவது அபூர்வமான ஆள்... மாற்றைக் குறைத்து சொல்லாமல் பொன் வாங்குபவர். கூட்டிச் சொல்லி வாங்கினால் அவரின் நிலைமை என்ன ஆகிறது?

அடுத்ததாக உள்ள அபூர்வமானவர் எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர்.

உத்தியோகத்தர் என்றால் அதற்கு விளக்கம் என்ன தெரியுமா?

இலஞ்சம் வாங்குவதற்குப் பல உத்திகளைத் தெரி ந்து வைத்திருக்கிறவர்... அதனால் அவர் யோகஸ்தர்! அதுதான் உத்தியோகஸ்தர்!

இன்றைக்கு உலகத்தில் இலஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்துவிடலாம். ஆனால், இலஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ளமுடியாதுபோல் இருக்கிறது!

இலஞ்சம்கொடுப்பதென்றாலும்வாங்குவதென்றாலும் சரி அதற்கு இந்தக்காலத்தில் சிபாரிசு வேண்டியிருக் கிறது. அருமையிலும் அருமையானவர்களில் ஐந் தாவது ஆள் தண்டனையை நியாயம் என்று ஒப்புக் கொள்ளும் குற்ற வாளி!

எனக்கு நீதிமன்றில் பத்துவருட கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்பாகிவிட்டது. அது நியாயமான தண்டனைதான்! அந்த தண்டனையைக் கொடுத்த நீதிபதி எனக்குத் தெய்வம் மாதிரி! என்றா சொல்லிக் கொண்டிருப்பான் அந்தக் குற்றவாளி.

இப்படியான ஆட்களைப் பார்ப்பது மிகக் கஷ்டம். அப்படி யாராவது கண்ணில் பட்டால் அவர்கள் அரு மையிலும் அருமையானவர்கள் தான்! ஒருவர் நல்ல கௌரவமான உத்தியோகத்தில் இருந்துகொண்டு இலஞ்சம் வாங்கினார்.

'ஏன் சேர்... இவ்வளவு கௌரவமான உத்தியோகத்தில் இருந்து கொண்டு இலஞ்சம் வாங்குகிறீர் களே... இது தவறு இல்லையா?' என்று கேட்டேன் அவரிடம்!

'இதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால் இந்தக் கௌரவமான உத்தியோகத்தையே நான் இலஞ்சம் கொடுத்துத்தான் வாங்கியிருக் கிறேன்!' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் நகரசபை

# தனியார் பேருந்து நிலைய புனரமைப்பு வேலைகளுக்கு நிதி கோரப்படுகின்றது

(மல்லாவி)

மன்னார் நகர சபையின் கீழ் இயங்கும் தனியூர் பேருந்து நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் சிறப் பான முறையில் முன்னெடுக் கப்பட்டு வருவதாக மன்னார் நகர சபையின்நகரபிதா சத்தியாப்பிள்ளை ஞானபிரகாசம் (அருமை) தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகை யில்,

தனியார் பேருந்து நிலையத்தின் குன்றும் குழியுமாக இருந்த தரைப் பகுதி செப்பனிடப்பட்டு நகர சபை யின் 15 இலட்சம் ரூபா நிதி யொது க்கீட்டின் மூலம் ஆரம்பக்கட்ட வேலை களும் பூர்த்தியாக்கப்பட் டுள்ளன.

நிலைய ஓடுபாதைகளுக்கு காபற் தார் கலவை இடும் வேலைக்குரிய நிதியாக 27 இலட்சம் ரூபாவை வட க்கு மாகாண சபையின் மீன் பிடி போக்குவரத்து மற்றும் கிராம அபி விருத்தி அமைச்சர் பா.டெனீஸ் வரன் நடப்பாண்டில் தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பன்முகப்படுத்தப் பட்டுள்ள வரவு செலவுத்திட்ட நிதி யிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

அந் நிதியுதவி எமக்கு கிடைத் ததும் குறிப்பிட்ட மிகுதி வேலை களும் விரைவாக பூர்த்தியாகப்பட வுள்ளன.

அத்தோடு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மன்னார் மாவட்ட பிரிவினரால் 56 இலட்சம் ரூபா செலவில் நவீன முறையில் குளியலறை வசதி உள்ளடங்கலாக ஆண் மற்றும் பெண்களுக்கான மலசலகூடம் ஒன்று அமைத்து தரப் பட்டுள்ளது.

இதன்மூலம் பயணிகள் மற்றும் பொதுமக்களும் நன்மை அடைந் துள்ளனர். இதன்தொடர் பராமரிப்பு வேலைகளை மன்னார் நகரசபை மேற்கொண்டு வருகிறது.

மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் பய ணிகள் தங்கும் மண்டபம் அமைக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பேரு ந்து நிலைய மிகுதி வேலைகளை யும் பூர்த்தி செய்வதற்கு மேலதிக நிதி யுதவிகளைப் பெற்றுக் கொள்ளு மு கமாக பல தரப்பினிடமும் செயற் றிட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)

## இயக்குநர்சபை தெரிவு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் ப.நோ.கூட்டுறவு சங்க த்தின் புதிய இயக்குநர் சபை கட ந்த வாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் நிர்வாகத்தலைவராக க.யோகநாதன், உபதலைவராக க.பரமேஸ்வரன், செயலாளராகத.சுதா கரன் உட்பட இயக்குநர் சபை உறுப் பினர்களாக தி.குணரெட்ணம், த.சுஜீத ரராஜ், ம.பிரதீபன், யோ.செல்வரஞ்சி, வ.விஜித்தா, ஐ.கந்தையா, சு.மனோ கரராஜா ஆகியோர் தெரிவாகியுள் ளனர். (2-15)




# வீட்டுத்திட்டங்களை பெறுவதற்கு பல வழிகளிலும் போராடுகின்றோம்

## உழவனூர் மக்கள் சந்திப்பில் சிறிதரன் எம்.பி

(கிளிநொச்சி)

வீட்டுத் திட்டம், மின்சாரம், வீதிப் போக்குவரத்து, வாழ்வாதாரம், காணி உரிமம் எனப் பல வழிக ளிலும் தாம் ஓரங்கட்டப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட உழவனூர் கிராமமக்கள் தெரிவித்துள்ளனர்.



உழவனூர் கிராம மக்களின் குறைநிறைகளைக் கேட்டறியும் கலந்துரையாடல் ஒன்று அண்மை யில் நடைபெற்றது.

இதில் கிராமமக்கள் தங்கள் குறைகள், தேவைகள் மற்றும் ஆதங்கங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு வெளிப்படுத்திய போதே மேற் கண்டவாறு கூறினர். பொதுமக்கள் தொடர்ந்து கூறுகையில்,

மண்ணின் மகிமை என்ற போர் வையில் தமிழர் நிலங்களை அப கரிக்க அரசாங்கம் போடட திட்ட ங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பு மண்ணின் மகிமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து மண் ணின் மகிமை தமிழர் காணி அப கரிப்பு திட்டம் பிசுபிசுத்துப் போன நிலையில் நீதியரசர் சிராணி பண்டார நாயக்கவையும் தூக்கி எறிந்து நீதியை இலங்கையில் குழி தோண்டிப் புதைத்துள்ளது.

தற்போது விசேட காணி உரிமைச் சட்டத்தை கையிலெடுத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இது தொட ர்பாக வன்னி பாராளுமன்ற உறுப் பினர் சி.சிறிதரனால் பூரண தெளிவு மக்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கு அவர் தொடர்ந்து கூறு கையில்,

இங்கு உங்களால் குறிப்பிடப் பட்ட குறைபாடுகள், தேவைகளை நாம் கருத்தில் எடுத்துள்ளோம். உழவனூர் நாதன் திட்டம் கிராம மக்களின் காணிகளுக்கான சட்ட ரீதியான உரிமங்களை பெறுவத ற்கும் வடமாகாண சபை மற்றும் உயர் பீடங்களுடனான கலந்துரை யாடல்கள்மூலம் வீட்டுத்திட்டங் களை பெறுவதற்கான வழிவகை களுக்கும் நாம் செயலாற்ற இருக் கின்றோம்.

மத்திய வகுப்பு காணி களில் நீண்டகாலமாக குடியி ருக்கும் மக்களை எழுப்பி விட்டு காணி களைப் பறிப் பவர்களுக்கு எதிராக நாம் உங்களுடன் இருந்து பணி யாற்ற தயாராக இருக்கின் றோம்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் கொண்டு வரப்படும் பல காணி தொட ர்பான தீர்மானங்கள் சட்ட மூலங்களுக்கு எதிராக தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பு சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து திருத்தங்களை கோருகின்றது. வழக்குகள தாக்கல் செய்கின்றது.

இது தமிழர் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டே செய்யப படுகின்றது. வெறுமனே ஒரு கிரா மத்துக்காகவோ அல்ல இன்றை க்கு நாம் எமது பூர்வீகமான வடக்கு கிழக்கில் கணிசமான பகுதியை பெரும்பான்மை இனத்தவர்களிடம் பறிகொடுத்து விட்டோம்.

எமது கடல் பெரும்பான்மை இனத்தவர்களால் சூறையாடப்படு கின்றது. கொக்குளாய் நாயாறு தன் முகமிழந்து நிற்கின்றது.

இன்று சர்வதேசத்திடம் நாம் தங்கியிருக்கின்றோம். சர்வதேச ரீதியாக புலம்பெயர் மக்கள் எமது தேசிய உரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண மிகுந்த பங்காற்றி வரு கின்றார்கள்.

வன்னிப்போர் முடிவுற்ற பின்பு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வன்னிப் பயணம் என்ற பெயரில் தலைவர் சம்பந்தன் தலைமையில் கிராம தரிசனங்களைச் செய்தனர். அதன் தலைவர் சம்பந்தன் அறிக்கை ஒன் றைத் தயாரித்து இந்திய அரசாங் கத்திடம் கொடுத்தார். இதில் முதலில எமது மக்களுக்கு வீடுகள் வேண்டு மென வேண்டுகோள் விடப்பட்டது. அதன் விளைவுதான் இன்று நடை முறைப்படுத்தப்படுகின்ற வீட்டுத் திட்டம் என அவர் கூறினார்.

இக்கலந்துரையாடலில் வட மாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் குமாரசிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2)



இலங்கை கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான பெண்கள் கழகத்தினரால் ஒவ்வொரு ஆண்டும் தெரிவு செய்யப்படும் இளம் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான 2014 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வில் சிறு கைத்தொழில் உற்பத்திப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் 2 ஆவது இடத்தை பெற்று வெள்ளிப்பதக்கத்தை அண்மையில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கிருஸ்ணதாஸ் சாயிராணி பெற்றுக்கொண்டார். அவரது அருகில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் வடமாகாண பிரதேச முகாமையாளர் சண்முகம் தீர்த்தசீலன், கிளி நொச்சிக்கிளை முகாமையாளர் கோபாலசாமி சற்குணபாலன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## உயிலங்குளம் மக்களின்

# வாழ்வாதாரத்தை முன்னேற்ற விழிப்புணர்வு செயலமர்வு

(மல்லாவி)

அன்ராட் நிறுவனம் விழிப் புணர்வுகளை ஏற்படுத்துவதற் கான செயலமர்வுகளை மாதாந்தம் நடத்துவதற்கு 16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங் கியுள்ளதாக உயிலங்குளம் கிராம த்தின் கிராம அபிவிருத்தி சங்கத் தின் தலைவர் அ.ஸ்ரீகாந்தன் தெரி வித்துள்ளார்.

குறித்த நிறுவனம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உயி லங்குளம் கிராமத்தின் கிராம அபி விருத்தி சங்கத்தின் கீழுள்ள மக்க ளுக்கிடையிலான சுகாதாரம் மற் றும் நோய்த் தாக்கங்கள் உட்பட தொழில் முயற்சிகளை மேற்கொள் வதற்கான விழிப்புணர்வுகளை ஏற் படுத்துவதற்கான செயலமர்வு களை மாதாந்தம் நடத்துவதற்கு அதனை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிலங்குளம் கிராமமானது குறிப்பாக பொருளாதார நெருக்கடி களைக்கொண்ட குடும்பங்களை உள்ளடக்கிய மிகவும் பின்தங்கிய இடமாகும்.

இவற்றைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் காலங்களில் இது தொடர் பான செயற்பாடுகள் முன்னெடுக்க ப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது மக்களுக்காக செயற்படவில்லை

## கெஹலிய இப்படிக்கூறுகின்றார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மக்களுக்காக செயற்படவில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவோ அல்லது வடக்கு மக்களின் நலன்களுக்காக செயற்படவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளை விமர்சித்து அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் இலாப மீட்ட முயற்சிபபதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வட மாகாணசபையும் மக்களின் நலன்களில் கரிசனை கொண்டு செயற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை அரசியல் இலாபமீட்டும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தையும் மனித உரிமைகளையும் பற்றி குரல் கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மக்களின் அபிவிருத்திக்காக எதனையும் செய்யத் தவறியுள்ளதாகக் குறிப்பிட் டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயமானது அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளை முடக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித் துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின அரசியல் நோக்கங்களை மக்கள் புரிந்துகொள்வார்கள் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி காணாமல் போய்விடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக சேறு பூசுவதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருவதாகத்தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளை தடுக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என அவர் தெரிவித்தார். (இ)

# 24 மணித்தியாலங்களுக்குள் 6 பொலிஸார் மீது தாக்குதல்

கடந்த 24 மணித்தியாலங்களில் பல பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் ஆறு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் காயமடைந்துள் ளனர். கண்டி, ஊருபொக்க மற்றும் கித்துல்கல ஆகிய பகுதிகளில் நேற்றிரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களிலேயே இவர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தாக்குதலுடன்தொடர்புடைய ஏனையவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப பேச்சாளர் தெரிவித்தார் கித்துல்கல பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் இராணுவ சிப்பாய் ஒருவர் தொடர்புபட்டுள்ளதாகவும் அஜித் ரோஹண கூறியுள்ளார். பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மீது மேற்கொள் ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## சமாதான பாசறை நிகழ்வு

திருமறை கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலுள்ள 20 மன்றங்களை சேர்ந்த சிறுவர், சிறுமியர்கள் இணைந்த சமாதான பாசறை நிகழ்வு வவுனியா காமினி வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிநடைபெற்று வருகின்ற இந்தப் பாசறை நிகழ்வில் சிறுவர் சிறுமியர்கள் தங்கள் கலை, கலாசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகளை ஆற்றுகை செய்து வருகின்றனர்.

இந்தப்பாசறையால்சிறுவர்களின் மன உளைச்சல்கள் நீங்கி அவர்கள் மகிழ்ச்சிகரமாக மாற்றமடைவார்கள். இதன்மூலம் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றமடைந்து நற்பிரஜைகளாக உருவாகுவார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (இ)

# குளவிக் கொட்டுக்குள்ளான வீரர்கள் வைத்தியசாலையில்

(பொற்பதி)

ய்ாழ்.வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக வீரர்கள் மூவர் நேற்றுக்காலை கடுமையான குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளதாக விளையாட்டுக் கழகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தெரியவருவதாவது,

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று விளையாட்டுக்கழக மைதானத்தை கழி மணல் கொண்டு நிரப்ப முன் வந்துள்ளதாகவும் அக் களி மணலை விளையாட்டுக்கழக மைதானத் திற்கு போடுவதற்கு பனை ஓலை வெட்டுவதற்காக பனை மரத்தில் ஏறிய போது குளவிக் கூடு கலைந்ததால் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் வீரர்கள் மூவர் கடுமையான கொட்டுக்கு உள்ளானதாகவும் கழகத்தினர் தெரிவித்தனர்.

குளவிக் கொட்டுக்கு உள்ளானவர்கள் கைத்தொலைபேசி மூலம் தகவல் கொடுத்ததை தொடர்ந்து மைதானத்தில் இருந்த ஏனைய வீரர்கள் இவர்களை மீட்டு உடனடியாக மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் இதில் இருவரின் நிலை மோசமானதாயிருந்ததால் உடனடியாக பருத்தித்துறை, மந்திகை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் ஒருவர் தொடர்ந்தும் மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

இ.லதீஸன்(வயது22) பி.தனோஜ் (வயது 18), ஆர்.அஜித் (வயது 18) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-64)



சோட்டோகான் கராத்தே அக்கடமி இன்ரநசனல் ஶ்ரீலங்கா பிரதம பயிற்றுநரும் பரீட்சகருமான அன்ரோ டினேஸினால் அண்மையில் நடத்தப்பட்ட கறுப்புப்பட்டி தேர்வில் சித்தியடைந்த யாழ்.புங்குடுதீவு பயிற்சியக மாணவர்களான எம்.முரளி மற்றும் எம்.சுதன் ஆகியோருடன் பயிற்றுனர்களான சென்சேய்.எம்.முருகானந்தனையும் படத்தில் காணலாம்.

மேற்குறிப்பிட்ட மாணவர்கள் கல்வித்திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான கராத்தே போட்டியில் (வட மாகாணம்)பதக்கங்களைவென்றுதேசிய போட்டி க்கு தெரிவாகியுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிவுத்துயர் பகிர்வு



### செல்லையா மகேஸ்வரன்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரன் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் சரசாலை வடக்கு கொம்பிகுள மயானத்தில் தகனம் செய்யப் ப்டும்.



### இராசையா யோகநாதன்

கரணவாய் சோளங்கனைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Gossau St. Gallen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா யோகநாதன் கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு Friedhof Feldli, Gerold Jung, Feldlistrasse 18, 9000 St.Gallen என்னும் முகவரியில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி சதாசிவம் பொன்னம்மா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் பொன்னம்மா கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு Centre Funeraire et Crematoire de Saint- Georges Chemin de la Batie 13 1213 Petit- Lancy என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### சுந்தரலிங்கம் சுரவிந்

வடமராட்சி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடா Ottawa ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சுரவிந் கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 3700, Prince Of Wales Drive,Nepean,ON K2C 3H1,Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### சுப்பையா கோபாலசிங்கம்

மல்லாவியைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கோபாலசிங்கம் கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு Frazioni Falcioni, 46 Genga, Ancona, Italy என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி பண்டாரம்

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பண்டாரம் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சாகரி செல்வராசா

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Orleans ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சாகரி செல்வராசா கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு Funeraire PGG, 83 Boulevard Robert,Ballanger, 93420, Villepinte,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### கந்தசாமி நிமலநாதன்

பளை அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Rome ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நிமலநாதன் கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு இத்தாலி Rome இல் நடைபெறும்.

# துப்பாக்கிச் சூடு; 70 பேர் பலி

ஈராக்கில் டியாலா மாகாணத்தின் ஹம்ரீன் பகுதியிலுள்ள சன்னி பிரிவினரின் பள்ளிவாசல் ஒன்றில் ஷியா போராளிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 70 பேர் உயிரிழந்துள்ளனர்.

இயந்திரத் துப்பாக்கிகளுடன் நுழைந்த ஷியா போராளிகள் பள்ளிவாசலுக்குள் இருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் அங்கிருந்த 70 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 20 இற்கும் மேற்பட்போர் படுகாய மடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக் கப்பட் டுள்ளனர். (இ

# வாரிவிட்டான் வீதியினை புனரமைக்க கோரிக்கை

யாழ்.வடமராட்சி கிழக்கின் தாழையடியிலிருந்து புதுக்காடு வரையில் நீண்டு செல்கின்ற வீதியை ஊடறுத்து கிழக்கு நோக்கி நாவலடிச் சந்தியிலிருந்து செல்கின்ற சுமார் இரண்டரைக் கிலோமீற்றர் நீளமான வாரிவிட்டான் வீதியானது பல வருடங்களாக திருத்தப்படாது கடுமையாக சேதமடைந்து குன்றுங் குழியுமாக காணப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் பெய்த கன மழை காரணமாக இவ் வீதியில் பல இடங்களில் பாரிய குன்றும் குழியும் ஏற்பட்டுள்ள அதேவேளை வீதியில் நீர் தேங்கிக் காணப்படுகிறது.


இவ் வீதி வடக்கின் வசந்தம் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திருத்தம் செய்வதற்காக கருங்கல், சல்லி கிரவல் மணல் ஆகியன வீதியின் இரண்டு பக்கங்களிலும் பறிக்கப்பட்டு காணப்படுகிறது.


இவைகள் பறிக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இவ் வீதி திருத்தப்படவில்லையென மக்கள் தெரிவித்தனர். (இ-64)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோடான கோடி பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க நல்லூரான் நேற்று தேரேறி வலம் வந்தான்













# 170 பேருடன் மூழ்கியது படகு

லிபியாவில் இருந்து ஐரோப்பா நோக்கி சுமார் 170 பேருடன் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று சீற்றமான அலை காரணமாக லிபியாவை அண்டிய கடற்பகுதியில் மூழ்கியுள்ளது.

இந்த விபத்தில் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

17 பேரை லிபிய கடற்படையினர் உயிருடன் மீட்டுள்ளனர். மற்றவர்களைத் தேடிவருகின்றனர்.



தலைநகர் டிரிபோலிக்கு கிழக்காகவுள்ள துறைமுகம் ஒன்றிலிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் படகு பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளது.

உடனடியாக மீனவர்கள் அதிகாரிகளுக்கு அறிவிக்க, மீட்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தங்களிடம் போதுமான கருவிகள் இல்லையென்று கூறுகின்ற லிபிய கடலோரக் காவற்படையினர், மீட்புப் பணிகளுக்காக படகுகளை கடன்வாங்கும் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தனர். (இ)

எபோலா அச்சம்

# லைபீரியா, கினி எல்லைகளை ஐவரி கோஸ்ட் மூடியுள்ளது

மேற்கு ஆபிரிக்காவில் ஆட்கொல்லி நோயாக பரவிவரும் எபோலா வைரஸ் தொற்றிலிருந்து தப்புவதற்காக லைபீரியா மற்றும் கினி ஆகிய நாடுகளுடனான எல்லைகளை ஐவரி கோஸ்ட் மூடியுள்ளது.

இரண்டு அண்டைநாடுகளிலும் எபோலா தொற்று தொடர்ந்தும் பரவிவருவதால் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக ஐவரி கோஸ்ட் அரசாங்கம் கூறியுள்ளது.

இப்படியான பயணக் கட்டுப்பாடுகள் பாதிக்கப்பட்ட நாடுகளில் உணவுப் பற்றாக்குறை பிரச்சினையை தீவிரப்படுத்தும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்கனவே எச்சரித்துள்ளது.


எனினும், பயணக் கட்டுப்பாட்டை விதித்துள்ள புதிய நாடாக ஐவரி கோஸ்ட் இந்த நடவடிக்கையை தற்போது அறிவித்துள்ளது.

லைபீரியா, கினி மற்றும் சியோரா லியோன் ஆகிய நாடுகளிலிருந்து ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட மக்கள் எபோலா தொற்றுக்குப் பலியாகியுள்ளனர்.

நைஜீரியாவில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். (இ)

# கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள மெக்சிக்கோ நிலவெடிப்புச்சம்பவம்

ஒரு கிலோ மீற்றருக்கு 26 அடி ஆழம்



மெக்சிகோவின் வட மேற்கில் ஹெர்மோசிலோ பகுதி உள்ளது. அங்குள்ள ஒரு பண்ணை நிலத்தில் திடீரென வெடிப்பு ஏற்பட்டது. 26 அடி ஆழ அந்த வெடிப்பு சுமார் ஒரு கி.மீற்றர் தூரம் வரை வியாபித்து இருந்தது.

பண்ணை நிலத்தில் தொடங்கிய அந்த வெடிப்பு நெடுஞ்சாலையையும் பாதித்து கடற்கரை வரை இருந்தது. அது 16 அடி அகலத்தில் இருந்தது.

இந்த வெடிப்பு காரணமாக நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பூமியில் திடீரென வெடிப்பு ஏற்பட்ட காரணம் குறித்து மண்வள நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் சமீபத்தில் நில நடுக்கம் ஏற்பட்டது. அதனால் வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என கருதப்பட்டது.

இப்பகுதியில் விவசாயிகள் தடுப்பணை கட்டியுள்ளனர். அதில் இருந்து கசிந்த நிலத்தடி நீர் மிருதுவான நிலப்பகுதிக்கு மேலே பீறிட்டு வந்ததால் பூமியில் வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மீண்டும் வான்வழித்தாக்குதல்

## 7 மாடிக் கட்டடம் தரைமட்டம்

பாலஸ்தீனத்தில் உள்ள ராஃபா நகரின் மீது நேற்று காலை இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஏழு மாடி கட்டடம் தரை மட்டமானது. மேலும் 2 அடுக்கு வணிக வளாக கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அந்த கட்டடத்தின் பெரும்பகுதி சேதமடைந்தது.

காஸாவில் உள்ள 44 அடுக்கு மாடி குடியிருப்புகளை கொண்டு 12 மாடி கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சில மணி நேரங்களில் ராஃபா நகரின் தெற்கு பகுதியில் உள்ள கட்டடங்கள் மீது நேற்று காலை தாக்குதல் நடத்தப்பட்டது.



கடந்த வாரம் முதல் அடுக்கு மாடி குடியிருப்புகளில் குடியிருந்த மக்களை அங்கிருந்து காலி செய்யுமாறு இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கை செய்து வந்த நிலையில் நேற்று மிகப்பெரிய கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் மீது காஸாவில் இருந்து 10 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிரியாவில் இருந்து மேலும் ஐந்து ரொக்கெட்டுகள் மூலம் வடக்கு இஸ்ரேலில் உள்ள காலியிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு தரப்பையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்த எகிப்து நாடு, தற்போது இரு தரப்பும் தாங்களாகவே மறைமுக பேச்சு நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு ஒருவரை பலமுறை தாண்டிச் சென்று விட்டாலும், நல்வாய்ப்பு ஒரு நாள் அவரை கண்டுபிடித்தே தீரும்.

—ஸெனேகா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவை கூட்டமைப்பு அவசியம் சந்திக்க வேண்டும்

பிதாமகர் என்று அழைக்கப்படும் வீஷ்மர் இருக்கும் வரை பாரதப் போரில் துரியோதனனை வெல்ல முடிய வில்லை. இந்த உண்மையை பார்த்தசாரதி உணர்ந் திருந்தார். இது பாண்டவர்களுக்கும் தெரிந்த விடயம்.

குருஷேத்திரப் போரில் ஒவ்வொரு நாளும் பாண்டவர் படை அழிந்து போகிறது. வீஷ்மர் உயிரோடு இருக்கும் வரை இந்த நிலைமை தொடரும் என்பதால், வீஷ்மரை விண்ணுலகம் அனுப்புவது அவசியமாகிறது. எனினும் வீஷ்மரை வெல்லுவது என்பது முடியாத காரியம். பாண்ட வர்கள் மீது வீஷ்மருக்கு பற்றும் பாசமும் அதிகமாயினும் அஸ்தனாபுரத்தின் மீது யார் போர் தொடுத்தாலும் அதனை எதிர்த்து அஸ்தனாபுரத்தைக் காப்பாற்றுவேன் என்பது வீஷ்மரின் சபதம். இந்நிலையில் வீஷ்மரைக் கொல்வ தற்கான உபாயம் யாது? என்ற ஆராய்ச்சி பாண்டவர் பக்கம் நடக்கிறது.

இங்குதான் பார்த்தசாரதி வியூகம் அமைக்கின்றார். போர்க்களத்தில் தீரமுடன் போரிடும் வீஷ்மருக்குத் தனது திருப்பெரு வடிவத்தை காட்டுகிறார் பார்த்தசாரதி.

மாதவனின் திருப்பெருவடிவத்தைக் கண்ணுற்ற வீஷ்மர் தனக்கு மரணம் எங்ஙனம் நிகழும் என்பதைக் கூறுகிறார். வீஷ்மரின் மரணம் எவ்வாறு நடக்கும் என் பதை வீஷ்மரிடமே கேட்டறிந்து அவரின் கதையை முடித் ததான பாரதக்கதை அரசியல் இராஜதந்திரத்திற்கான ஒரு பாடம் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் நன்கு உணர வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த விடயம். இந்தியப் பிரதமர் மோடியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தமை இலங்கை அரசியலில் இனம் புரியாத தடுமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை யும் கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு முன்ன தாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கட்டாயமாகச் சந்தித்திருக்க வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையில் தமிழக முதல் வர் ஜெயலலிதா எடுத்த தீர்மானங்கள், பிரதமர் மோடிக்கு அவர் அனுப்பிய கடிதங்கள் மிகவும் முக்கியமானவை.

கலைஞர் கருணாநிதியோடு ஒப்பிடும் போது, எங்கள் விடயத்தில் முதல்வர் ஜெயலலிதா எவ்வளவோ மேல் எனலாம்.

எனவே பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு முன்ன தாக ஜெயலலிதாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் சந்தித்திருந்தால் அதற்கான பெறுமானம் மிகவும் உயர்வானதாக இருந்திருக்கும்.

அதேநேரம் மோடியுடன் எவ்வாறு பேச வேண்டும்—அணுக வேண்டும் என்பதையும் ஜெயலலிதா சொல்லிக் கொடுத் திருப்பார். எனினும் தமிழக அரசுடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அக்கறை இல்லாமல் இருப் பது இன்று நேற்றல்ல என்பதையும் இவ்விடத்தில் கூறித் தானாக வேண்டும்.

எதுவாயினும் இந்தியப் பாராளுமன்றத்தில் மூன்றா வது பலம் மிக்க சக்தியாக இருக்கக் கூடிய அதிமுகவின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவை இனி மேலாவது அவசியம் சந்திக்க வேண்டும்.

தமிழகத்தின் உதவியில்லாமல் எங்கள் பிரச்சி னையை ஒருபோதும் தீர்க்கமுடியாது. அதிலும் ஆளுமை மிக்க தலைவியாக இருக்கக் கூடிய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை சந்திப்பது என்பது மோடியின் சந்திப்பை மேலும் வலுச் சேர்ப்பதாகும்.

பிரதமர் மோடியைச் சந்தித்தால் போதும் என்ற நினைப்பில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்திக் காமல் விடுவது, மோடியுடனான சந்திப்பையும் அர்த்த மற்றதாக்கி விடும்.

சிவன் கோவிலாக இருந்தாலும் பிள்ளையாருக்குத் தான் முதலில் பூஜை என்ற நடைமுறையை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு பின்பற்றுவது அரசியல் இராஜதந்திர வெற்றிக்கு மிகவும் அவசியம்.

# வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த நகைகள் குறித்து விசாரணை

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணம வந்து நகைகளை பறிகொடுத்தவர்கள் எவ்வளவு நகைகளை யாழ்ப்பாணத்தி ற்கு கொண்டு வந்தார்கள் என்பது தொட ர்பில் அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங் கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு வரு வதாக யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸ் நேற்று ஞாயி ற்றுக்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்,

வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பா ணத்திற்கு வந்தவர்களின் நகைகள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்திலு ள்ள பொலிஸ் நிலையங்களில் அண் மைக் காலங்களில் அதிகமான முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

திருடப்பட்ட நகைகள் 35, 40 பவு ண்களுக்கு அதிகமாகவே இருப்பதாக முறைப்பாடுகளில் நகை உரிமையாளர் களால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இருந்தும், வெளிநாட்டிலிருந்து வரு பவர்கள் நகைகள் கொண்டு வருவத ற்கு கட்டுப்பாட்டு அளவுகள் இருக்கின் றன. அவற்றை அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்கள் கண்காணிக்கும்.

ஆகவே, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கும் பொருட்டு, அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்களுடன் தொடர்பு கொண்டு, யாழ்ப்பாணத்தி ற்கு வந்தவர்கள் எவ்வளவு நகைக ளைக் கொண்டு வந்தனர் என்பது தொடர்பில் தகவல்கள் திரட்டப்படவுள் ளன.

முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட நகைகளை விட குறைவான அளவில நகைகள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவ ர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என றொஹான் டயஸ் மேலும தெரிவித்தார். (செ-6)

# சூழியல் முறைப்படி நிர்மாணிக்கப்பட்ட இந்து ஆலயம் லண்டனில் திறப்பு

உலகிலேயே சூழியல்(பசுமை) முறைப் படி நிர்மாணிக்கப்பட்டதாக நம்பப்படும் முதல இந்து ஆலயமான லண்டனில் கிங்ஸ் பரி என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுவாமி நாராயணன் ஆலயம் பக்தர்க ளின் தரிசனத்துக்காக திறக்கப்பட்டுள்ளது.

லண்டனின் வடமேற்குப் பகுதியில் 20 மில்லியன் பவுண்ட்ஸ் செலவில் நிர் மாணிக்கப்பட்ட இந்த ஆலயம் இந்து ஆகம முறைப்படியும், பாரம்பரிய இந்து ஆலயக் கட்டிட வடிவமைப்பிலும் பசு மைத் தொழில் நுட்ப அம்சங்களையும் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

அத்துடன், சூரிய ஒளியின் மூலம் சூரிய சக்தியைப் பெற்று சேமித்து வைக் கும் சூரிய சக்தி தகடுகளையும், கூரைக ளின் வழியாக மழைநீரை சேமிக்கும் தொழில்நுட்பத்தையும் இந்த ஆலயம் தன்னகத்தே கொண்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி பக்தர்களின் தரி சனத்திற்காக திறக்கப்பட்ட இந்த ஆலயத் தின் திறப்பு விழா நிகழ்வுக்கு உலக ஆன் மீகத் தலைவரான ஆச்சார்ய சுவாமி ஸ்ரீ மகராஜ் அவர்கள் தலைமை தாங்கி னார்.

இந்த விழாவில் இந்து முறைப்படி தலைப்பாகை அணிந்து, சிவப்பு நிற குங்குமம் நெற்றியில் இட்டு, லண்டன் மாநகர மேயர் போரிஸ் ஜோன்சன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த ஆலயத்தின் கட்டிட சிறப்பி யல்புகளும், வசதிகளும் தனது கவ னத்தை ஈர்ப்பதாகவும், அதிசயிக்கத் தக்க வகையிலும் அமைந்திருப்பதாக வும் போரிஸ் ஜோன்சன் தனதுரையில பாராட்டினார்.

இந்த ஆலயத்தின் திறப்பு விழா ஆறு நாட்களுக்கான விழாவாகத் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகின்றமை குறி ப்பிடத்தக்கது. (செ-6)

# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த் துறையின் வன்னி வரலாறும்-பண்பா டும் நூல் அறிமுகவிழா இன்று 25-ம் திகதி திங்கட்கிழமை தமிழ்த்துறை மண்டபத்தில் முதுநிலை விரிவுரை யாளர் க.அருந்தாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நூல் அறிமுகவிழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக த்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

அதேவேளை நூல் அறிமுக உரை யினை முன்னாள் கலைப்பீடாதிபதியும் ஓய்வுநிலைப் பேராசிரியருமான இரா. சிவச்சந்திரனும், கருத்துரைகளை பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.புஸ்ப ரட்ணமும், அரசறிவியல்துறை முதுநிலை விரிவுரையாளருமான கே.ரி.கணே [illegible]

# எண்ணெய் பாதிப்பிற்கு தீர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் இயங்கிவரும் இல ங்கை மின்சார சபையின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாக கழிவு எண் ணெயால் நிலத்தடி நீர் மாசடைந்துள் ளது. இது தொடர்பாக கடந்த மாகாண சபை அமர்வில் குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட கிணறு களைப்பார்வையிடுவதற்காக நேற்றுமுன் தினம் விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன், வடமாகாணசபை உறுப்பினர் களான த.சித்தார்த்தன் மற்றும் பா.கஜ தீபன், வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை தலைவர் தி.பிரகாஷ், வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேசசபை தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோர் நேற்று முன் தினம் சனிக்கிழமை பி.ப 2 மணிய ளவில் சுன்னாகத்துக்கு விஜயம் செய்தனர்.

பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுடன் சுன்னாகம் சிவன்முன் பள்ளியில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. மக்கள் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதில ளித்த உறுப்பினர்கள் இப்பிரச்சினை யில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மின்சக்தி அமைச்சு, சுற்றுச்சூழல் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பன தொடர்புபட்டுள்ளன. அவர்கள் இப்படியான பிரச்சினைகள் தெற்கில் இடம்பெற்ற போது உடனடி யான நடவடிக்கைகளை மேற்கொண் டனர். ஆனால் எமது பிரச்சினையில் அசமந்தமான போக்கையே கடைப் பிடிக்கின்றனர். ஆயினும் நாம் முயற்சி செய்து தீர்வொன்றைப் பெற்றுத்தர முயற்சிக்கிறோம் எனத்தெரிவித்தது டன், மக்களால் முன்னெடுக்கப்படவுள்ள வழக்குத்தாக்கல் முதலிய நடவடிக்கை களுக்கும் பூரண ஆதரவளிப்பதாகவும், வேண்டிய உதவிகள் புரிவதாகவும் உறுதியளித்தனர். (செ-6)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**24.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**
**சின்மயா மிஷனின் நோக்கம் யாது?**
ஏந்தவிதமான பின்னணியையும் உடைய மனிதர்களுக்கு வேதாந்த ஞானத்தை அளித்து அவர்களது ஆன்ம வளர்ச்சிக்கும் சந்தோசத்திற்குமான நடைமுறைச் சாத்தியமான வழியையும் அளித்து அவர்கள் சமுதாயத்திற்கு அனுகூலமானதைச் செய்பவர்களாக மாறுவதற்கு வழிவகுப்பது ஆகும்.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இன்ப ஊற்று



என்னிடம் ஒரு முழுமையான ஆற்றலோடு எல்லாம் வல்ல இறைவன், என்னைப் படைத்திருக்கிறான், பக்திமா னாக இருந்தாலும் ஞானவானாக இருந்தாலும் அவனு டைய பிரதிநிதியாகவே, அவனுடைய பகுதியாகவேதான் இருக்கின்றேன். பேராற்றல் என்னிடம் அடங்கி இருக்கிறது. இதைக்கொண்டு என்னென்ன நலம் செய்து கொள்ள வேண் டுமோ அதை நானே விளைவித்துக்கொள்வேன்.

பிறருடைய உதவி தேவையான இடத்திலே அவர்களுக்கு உதவி செய்து அந்த உதவியை நான் பெறுவேன் என்ற அளவிலே உதவுபவர்களுக்கெல்லாம் நாம் பதில் செய்து கொண்டிருப்பேன் என்ற அளவிலே கடமை உணர்வோடு நின்று பாருங்கள் பெரிய சக்திவாய்ந்த ஒரு ஆற்றல் உங்களிடம் பெருகிவிடும். தினந்தோறும் அதைப்பயன்படுத்துங்கள்.

நீங்கள் ஒரு அதிகாரியாக இருக்கலாம். உங்கள் அதிகாரத்தின் கீழ் ஆயி ரமாயிரம் மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கக்கூடும். நீங்கள் இந்தப்புறம் திரும்பி நாம் அவர்களுக்கு என்ன செய்யமுடியும் என்று எண்ணி விட்டீர்க ளேயானால் அத்தனை ஆயிரம் மனிதர்களும் அவர்களின் தேவைகளும் நேரடியாக உங்களுக்குத் தெரியத் தொடங்கும். அதைச் செய்ய ஆரம்பித் தீர்களேயானால், அவ்வாறு செய்யச் செய்ய இன்ப ஊற்றுத்தான் மனதிலே ஊறும். தெய்வத்தோடு தெய்வமாகவே நிற்கும் ஒரு நல்ல காட்சி உள்ளத்தில் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளை மனதில் கொள்ளாது அணியின் வெற்றியை நோக்கமாக கொண்ட ஒரு பரிபூரண கிரிக்கெட் வீரர் மஹேல.

# அஸ்தமித்தது பளிச்சிட்ட இலங்கை நட்சத்திரம்





**சோ**தனைகள் இல்லாமல் யாரும் சாதனையாளன் ஆவதில்லை.

சாதனையாளன் அனைவரும் சோதனைகளை சந்திக்காமல் இருக்கவுமில்லை.

மஹேல ஜெயவர்த்தன என்ற இலங்கையின் பளிச்சிட்ட கிரிக்கெட் நட்சத்திரம் கடந்த வாரம் தனது டெஸ்ட் வாழ்க்கைக்கு ஓய்வை கொடுத்துள்ளது.

இம் முடிவானது இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமல்ல உலகளாவிய கிரிக்கெட் ரசிகர்களுக்கும் பெரும் சோகமான நாளாக அமைந்துவிட்டது.

50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட், இருபது - 20 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் என கிரிக்கெட் போட்டிகளில் வடிவங்கள் இருந்தாலும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு இருக்கக்கூடிய சிறப்பம்சமானது தனித்துவமானது எனலாம்.

காலத்திற்கு காலம் புதிய வீரர்கள் பலரை கிரிக்கெட் பார்த்தாலும் இதுவரை காலமாக டெஸ்ட் போட்டிகளின் முதுகெலும்புகள் என விரல் விட்டு எண்ணக்கூடியது ஒரு சிலரை தான்.

டெஸ்ட் போட்டிகளில் பல வீரர்கள் இருந்தாலும் ஒரு சிலரையே ஜாம்பவான்கள் என அழைப்பார்கள். அணியின் வெற்றிக்கு அவர்களே முதுகெலும்பாக இருப்பார்கள்.

இலங்கை அணியை பொறுத்தவரை முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன என பட்டியலிடலாம்.

மஹேல ஜெயவர்த்தன என்ற மகத்தான இலங்கை கிரிக்கெட் நட்சத்திரம் பல தடைகளை தாண்டி நெருக்கடியான பல சந்தர்ப்பங்களை சந்தித்து சாதனை பயணத்தோடு தனது டெஸ்ட் வாழ்வுக்கு விடை கொடுத்துள்ளார்.

அர்ஜுனா ரணதுங்க, அரவிந்த டீ சில்வா, சனத் ஜெயசூரிய என பல இலங்கையின் சிரேஷ்ட வீரர்கள் இலங்கை அணியில் செல்வாக்கு செலுத்திய காலத்தில் மஹேல 1997 ஆம் ஆண்டு ஆர்.பிரேமதாச சர்வதேச மைதானத்தில் இந்திய அணிக்கெதிரான தனது சர்வதேச அறிமுகத்தை மேற்கொண்டார்.

அவருடைய இராசிபலனோ என்னவோ தெரியவில்லை அவரது ஆரம்ப போட்டியே மிகப்பெரும் உலக சாதனை போட்டியாக அமைந்தது.

அசாருதீன் தலைமையிலான இந்திய அணியை துவம்சம் செய்து டெஸ்ட் வரலாற்றில் இடம்பிடித்தது அப் போட்டி. 6 விக்கெட்டை மாத்திரம் இழந்து 952 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை அடைந்தது இலங்கை அணி.

இவ் உலக சாதனையானது இன்றுவரைக்கும் முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவ் ஆரம்ப போட்டியில் மஹேல 66 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

இப்படி மஹேலவிற்கு அறிமுகப் போட்டியே சாதனையுடனான போட்டியாக இருந்ததால் என்னமோ சாதனைக்கும் மஹேலவிற்கும் நல்ல பொருத்தமாய் அமைந்துவிட்டது.

இதுவரைக்கும் 149 டெஸ்ட் போட்டியில் விளையாடிய மஹேல 11 ஆயிரத்து 814 ஓட்டங்களை பெற்றுள்ளார். இதில் 34 சதங்களும் 50 அரைச்சதங்களும் உள்ளடங்கியுள்ளன.

அதிக டெஸ்ட் ஓட்டங்கள் பெற்றவர்கள் பட்டியலில் சச்சின், பொண்டிங், கலிஸ், டிராவிட், சங்கக்கார, லாரா ஆகியோருக்கு அடுத்து 7 ஆவது வீரராக மஹேல ஜெயவர்த்தன உள்ளதோடு அதிக இரட்டை சதங்களை பெற்றவர்கள் வரிசையில் பிரட்மன் முதலிடத்திலும் (10) சங்கக்கார இரண்டாவது இடத்திலும் இருக்க 7 இரட்டை சதத்தை பெற்று 4 ஆவது இடத்தில் உள்ளார்.

ஒரு நாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் 200இற்கும் மேற்பட்ட பிடிகளை எடுத்த ஒரே ஒரு வீரர் மஹேல மட்டுமே.

ஒரே சர்வதேச மைதானத்தில் அதிக ஓட்டம் பெற்றவர் என்ற பெருமை இவரையே சாரும். எஸ்.எஸ்.சி மைதானத்தில் 27 போட்டிகளில் விளையாடி 2 ஆயிரத்து 921 ஓட்டங்களை குவித்துள்ளார்.

சொந்த மண்ணில் அதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையில் பொண்டிங், சச்சினுக்கு அடுத்தபடியாக மஹேல உள்ளார்.

டெஸ்ட் போட்டியில் அதிக பிடிகளை எடுத்தவர் வரிசையில் டிராவிட்டுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் உள்ளார்.

டெஸ்ட் போட்டியில் இவரின் அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கை 374 ஆகும். இதனை 2006 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக பெற்றார்.

மைதானத்தில் மட்டு மன்றி மைதானத்திற்கு வெளியிலும் கனவான் தன்மையோடும் மனித நேயத்தோடும் நடக்கும் பண்பை கொண்டவர் என்ற காரணத்தால்தான் இம் மாபெரும் சாதனை வீரனின் சரித்திர கிரிக்கெட் வாழ்வு நேசிக்கப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட்டில் எந்தவொரு விக்கெட்டுக்குமான அதிகபட்ச உலக சாதனை இணைப்பாட்டமாக பெறப்பட்ட 624 ஓட்டங்கள் மஹேல, சங்கக்காரவால் 2006 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி மைதானத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக பெறப்பட்டதாகும்.

டெஸ்ட் போட்டியில் அதிக இணைப்பாட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் சச்சின், டிராவிட்டுக்கு அடுத்தபடியாக மஹேல, சங்கக்கார உள்ளனர்.

இவரது தலைமையில் இலங்கை அணி 38 போட்டிகளில் 18 வெற்றி பெற்றுள்ளது. டெஸ்ட் போட்டியில் அதிக வெற்றிபெற்ற தலைவர்கள் என்ற பெருமை இவருக்கும் சனத் ஜெயசூரியவுக்கும் இருக்கின்றது.

2006 ஆம் ஆண்டும் நெதர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் அதிக பட்ச உலக சாதனை ஓட்டமான 443 ஓட்டங்கள் இலங்கை அணியால் பெறப்பட்டது. அதேபோல் 2007 ஆம் ஆண்டு இருபது - 20 போட்டியில் கென்யாவுக்கு எதிராக 260 ஓட்டங்கள் உலக சாதனையாக சாதனை பட்டியலில் இலங்கை அணியால் பெறப்பட்டது. இவ் இரு போட்டிக்கும் மஹேலவே தலைமை தாங்கினார்.


2006 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்திய "Captain of the year 2006" விருதும் 2007 ஆம் ஆண்டு "Spirit of cricket Award 2007" ஆகிய விருதுகளையும் மஹேல பெற்றார்.

அனைவரும் எதிர்பாராத வேளை கடினமான நேரத்தில் ஒரு சரியான முடிவை எடுத்தார் மஹேல.

கிரிக்கெட்டை நேசிப்பவராக நீங்கள் இருந்தால் இலங்கை கிரிக்கெட்டின் ஹீரோ என்றுசொல்லப்படும் மஹேலவை நேசிக்காமல் நீங்கள் இருக்கமுடியாது. அனைவரின் இதயங்களிலும் இடம் பிடித்த ஓர் உன்னத சாதனை நாயகன் மஹேல ஜெயவர்த்தன ஆவார்.

க.மதீசன்

# சென்.தோமஸை வீழ்த்தியது யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி



அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயதுப் பிரிவு 2 இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 69 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 49.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் ஜெனிபிளமிங் 74 ஓட்டங்களையும் கிரட்லக்சி 28 ஓட்டங்களையும் நிலோசன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரி அணி சார்பில் திலீபன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் சௌவினித் 9.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

201 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரி அணியினர் 39.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று 69 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர்.

இதில் சௌவினித் 34 ஓட்டங்களையும் குணதிலக 21 ஓட்டங்களையும் விஜயவர்த்தன 20 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் நிரோஷன் 9.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் நிலோசன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சோமஸ்கரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்துக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

# இந்திய-இங்கிலாந்து ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

## டெஸ்ட் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்குமா இந்தியா!




இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்விகளுக்கு பதிலடி கொடுக்கும் வண்ணம் ஒருநாள் தொடரை இந்திய அணி எதிர்கொள்கிறது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:3 என இழந்தது. இதையடுத்து, ஒருநாள் தொடரில் பயிற்சியாளர் பிளட்சருக்கு உதவ, சஞ்சய் பங்கர், பாரத் அருண் உள்ளிட்டோர் சென்றுள்ளனர். இவர்கள்பணியை மேற்பார்வை செய்ய ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தொடர் தோல்விக்கு சரியான பதிலடி கொடுக்கும் வகையில் ஒருநாள் அணியில் சஞ்சு சாம்சன், குல்கர்னி, கரண் சர்மா போன்ற இளம் வீரர்கள் களமிறங்க உள்ளனர்.

இந்த இரு அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி இன்று பிரிஸ்டலில் நடக்கிறது. இப்போதைய நிலையில், இங்கிலாந்து மண்ணில்



மற்றொரு தொடரை இழக்காமல் இருப்பதே முக்கியம்.

ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசையில் இங்கிலாந்து (5வது இடம்) பின்தங்கியிருந்தாலும், சொந்த மண்ணில் அவ்வளவு எளிதாக வெற்றியை விட்டுத் தராது. இதனால், டெஸ்ட் தொடரை போல, ஒருநாள் போட்டிகளிலும் அணித் தலைவர் தோனிக்கு கடும் சவால் காத்திருக்கிறது.

மிடில்செக்ஸ் அணியுடனான பயிற்சிப் போட்டியில் பெற்ற வெற்றி இந்திய அணியின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. டெஸ்ட் தொடரில் சொதப்பிய ஹோலி (10 இன்னிங்ஸ், 134 ஓட்டங்கள்) பயிற்சிப் போட்டியில் 71 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இவரின் சிறப்பான ஆட்டம் தொடருமானால் இந்திய அணி மீண்டும் வலுவானதாக மாறும்.

மேலும் அணியில் புதிதாக இடம பெற்றுள்ள சஞ்சு சாம்சன், தவால் குல்கர்னி உள்ளிட்டோர் அவுஸ்திரேலியாவில் நடந்த இளம் வீரர்களுக்கான தொடரில் மிரட்டிய வர்கள். அதனால் இன்றைய போட்டியில் இந்திய அணி சிறப்பாக செயல்படும் என எதிர்பார்க்கலாம்.

**இரு அணி வீரர்கள் விவரம்:**

**இந்தியா:** தோனி (தலைவர்), தவான், ரோஹித் சர்மா, ரஹானே, விராட் ஹோலி, ரெய்னா, ஜடேஜா, அம்பதி ராயுடு, அஸ்வின், சஞ்சு சாம்சன், ஸ்ரூவேர்ட் பின்னி, புவ்னேஸ்வர் குமார், தவால் குல்கர்னி, முகமது ஷமி, கரண் சர்மா, மோகித் சர்மா, உமேஷ் யாதவ்.

**இங்கிலாந்து:** குக் (தலைவர்), ஹறி பலன்ஸ், இயன் பெல், மோர்கன், அலெக்ஸ் ஹேல்ஸ், ஜோரூட், மொய்ன அலி, பட்லர், பென் ஸ்ரோக்ஸ், டிரெட் வெல், அண்டர்சன், கிறிஸ் வோக்ஸ், ஜோர்டன், ஹென்றி, ஸ்ரீபன் பின்.

# சிம்பாப்வே மும்முனைத் தொடர் இன்று ஆரம்பமாகிறது



சிம்பாப்வே, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகள் மோதும் மும்முனை ஒருநாள் தொடர் இன்று சிம்பாப்வேயின் ஹராரே நகரில் ஆரம்பமாகிறது.

இதன் ஆரம்பப் போட்டியில் அவுஸ்திரேலியா-சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

ரவுண்ட்-ரொபின் முறையில் அமையும் லீக் சுற்றில் ஒரு அணி மற்றைய அணியுடன் தலா இரு முறை மோதும். லீக் சுற்றின் முடிவில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் செப்.06ம் திகதி நடக்கும் இறுதிப் போட்டியில் விளையாடும்.

# ஹோலியுடன் திருமணம்; முற்றுப்புள்ளி வைத்த அனுஸ்கா சர்மா



இந்திய அணியின்துணை அணித் தலைவர் ஹோலியை, அனுஷ்கா திருமணம் செய்யப் போகிறார் என்ற செய்திகள் தவறானது என்று அனுஷ்காவின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி, இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் 3-1 என்ற கணக்கில் படுதோல்வியடைந்ததை தொடர்ந்து, இந்த தோல்விகளுக்கு வீரர்கள் தங்கள் மனைவிகளை அழைத்து சென்றதுதான் காரணம் என்று செய்திகள் வெளியாகின.

இதன் தொடர்ச்சியாக இந்திய கிரிக்கெட் சபை இனி வீரர்களுடன் பெண் தோழி அல்லது அவர்களின் மனைவி ஆகியோர் செல்ல அனுமதி அளிக்காது என்ற செய்திகளும் ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

இந்நிலையில், இங்கிலாந்துக்கு விராட் ஹோலியுடன், அனுஷ்கா சர்மா சென்று தங்க இந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்தது என்றும், இவர்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருக்கின்றனர் எனவும் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

அதேபோல் நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் போதும் ஹோலியுடன் அனுஷ்கா சர்மாவைப் பார்த்த தருணத்திலிருந்து இருவர் பற்றியும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இதுபற்றி அனுஷ்கா சர்மாவின பிரதிநிதி கூறுகையில், இணையங்களில் அனுஷ்கா சர்மாவின் திருமணம் பற்றி நிறைய செய்திகள் உலாவருகின்றன.

நான் ஒன்றைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இந்தச் செய்திகள் வெறும் வதந்திகளே. ஆகவே இது போன்ற விடயங்களை இனி எழுத வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

# ஜாம்பவான்கள் சச்சின், டிராவிட் இடத்தை ஹோலி, புஜாராவால் நிரப்ப முடியாது

## ஜெப்ரி பாய்காட்



முன்னாள் ஜாம்பவான்களான சச்சின், டிராவிட் இடத்தை ஹோலி, புஜாராவால் நிரப்ப முடியாது என முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் ஜெப்ரி பாய்காட் கூறியுள்ளார்.

இங்கிலாந்து மண்ணில் இந்திய அணியின் மோசமான செயற்பாட்டை பார்க்கும் போது இந்திய டெஸ்ட் அணியின் எதிர்காலம் கவலை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

முன்னணி வீரர்களான சச்சினும், டிராவிட்டும் இந்திய டெஸ்ட் அணியில் பெரும் பங்கு வகித்தனர். இவர்கள் 4-வது, 3-வது வரிசையில் விளையாடும் போது இந்த ஜோடி எதிர் அணிக்கு சவாலாக திகழ்ந்தது.

டிராவிட் ஓய்வுக்கு பிறகு புஜாரா 3-வது வரிசையிலும், சச்சினின் ஓய்வுக்கு பிறகு கோஹ்லி 4-வது வரிசையிலும் ஆடி வருகிறார்கள். அதனால் அவர்களது இடத்தை ஹோலியும், புஜாராவும் நிரப்புவார்கள் என்று கருதப்பட்டது.

ஆனால் இங்கிலாந்தில் இவர்களின் செயல்பாடு அந்த எண்ணத்தில் போதிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. டெஸ்ட் தொடரில் புஜாரா 38, 55, 28, 43, 24, 2, 0, 17, 4 மற்றும் 11 ஓட்டங்கள் எடுத்தார். அதே போல் ஹோலி 1, 8, 25, 0, 39, 28, 0, 7, 6, 20 ஆகிய ஓட்டங்களே எடுத்தார்.

இதுபற்றி முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவரும், வர்ணனையாளருமான ஜெப்ரி பாய்காட் கூறுகையில், சச்சினுடன் ஹோலியையும், டிராவிட்டுடன் புஜாராவையும் ஒப்பிடுவது கேள்வியை ஏற்படுத்தி இருக்கிறது.

இளம் வீரர்களான இந்த இருவரது ஆட்டம் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. செய்த தவறையே மீண்டும் மீண்டும் செய்தனர். இதன மூலம் அவர்கள் அளவுக்கு இவர்களால் டெஸ்டில் சாதிக்க இயலுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று கூறியுள்ளார்.

# நெய்மர் மீண்டும் காயம்



உலக கிண்ண தொடரில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீண்ட நெய்மருக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

பிரேசிலில் நடந்த உலக கிண்ணத் தொடரின் காலிறுதியில், பிரேசில் நட்சத்திர வீரர் நெயமரின் முதுகுப் பகுதியில் எலும்பு முறிந்தது. இதில் இருந்து மீண்ட இவர், சமீபத்தில் நடந்த மெக்சிகோ கிளப் அணிக்கு எதிரான நட்பு ரீதியான போட்டியில் பங்கேற்றார்.

இதனிடையே, பார்சிலோனா கிளப் அணியில் விளையாடும் நெய்மர், லாலிகா தொடரில் எல்சே அணிக்கு எதிராக சாதிக்க, பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது இவரது இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

இதுகுறித்து பார்சிலோனா இணையதளம் வெளியிட்ட அறிக்கையில், பயிற்சியில் நெய்மருக்கு காயம் ஏற்பட்டது உண்மைதான். இது 'கிரேட் 1' வகையை சேர்ந்தது. இதற்கான சிகிச்சையில் இவர் எந்தளவுக்கு முன்னேற்றம் அடைகிறார் என்பதை பொறுத்துதான், மீண்டும் வருவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடியுடன் கூட்டமைப்...

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தி, அது தொடர்பான விடயங்களை வைததுக்கொண்டு, இந்தியாவுடன்இலங்கை அரசாங்கமும் தமிழர் தரப்பும் சேர்ந்து பேசசுவார்த்தை நடத்தியிருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்தியாவுடனான பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொணடிருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தை முறையாக அமைய முடியும்.

இந்திய அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியாகவும், இலங்கை் அரசாங்கம் தனியாகவும பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் நன்மைகளை எட்டமுடியாது.

குறைந்த பட்சம் ஏனைய மாகாண சபைகளில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற அதிகாரங்களையாவது வட மாகாணசபைக்கு வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத் தரப்பை இணங்கச் செய்யும் முயற்சிகளில் தான் உள்ளிட்ட அரசாங்கத்திலுள்ள இடதுசாரித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் படைத்தரப்பினருக்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதையும் மக்களின் சிவில் வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படும விதத்தில் படையினர் நிலை கொண்டிருப்பதையும் தடுப்பதற்காக தான் உள்ளிட்ட சில தலைவர்கள் இலங்கை அரசாங்கததை இணங்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.


### தவறிவிட்டது

வளலாய் அச்சுவேலி எனும் முகவரியினையுடைய தேவராஜா விேனாபாஜி (890732941V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் (B 2038852) இன்சுரன்ஸ், ரக்ஸ் என்பன யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு : (7487)
0772555877, 0773699828



### நன்றி நவில்கின்றோம்...

### சி.வரதராஜன்

ஈழத்தின் பிரபல பொருளியல் ஆசிரியர்,
முன்னாள் விரிவுரையாளர் பொருளியற்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

நோயுடன் போராடிய வேளையில் அந்நோயின் தாக்கம் தணிக்க அயராது பாடுபட்ட யாழ்.போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை வைத்திய நிபுணர்களுக்கும், வைத்தியர்களுக்கும், தாதிய உத்தியோகத்தருக்கும், பணியாளர்களுக்கும்

மரணச்செய்தியறித்து இல்லத்திற்கு வந்து நேரில் அஞ்சலி செலுத்திய கௌரவ முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி தலைவர்கள், யாழ். மாந்கர மேயர், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், நீதிபதிகள்மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழக சமூகத்தினர், தனியார்கல்வி நிலைய ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும்



பத்திரிகைகள் மற்றும் வலைத்தளங்களில் செய்திகளைப் பிரசுரித்தவர்களுக்கும், செய்திகளை பாரெங்கும் கொண்டு சென்ற ஊடகங்களுக்கும் ஊடக நண்பர்களுக்கும்

சமூக வலைத்தளங்களில் தங்களின் துயரங்களினை பதிவு செய்தவர்களுக்கும்

எல்லாவற்றுக்கும் மேலாக அவரை வாழவைத்த அவருக்கு பெயரையும் புகழையும் பெற்றுக் கொடுத்த அவர் உயிராக நேசித்த, அவரிடம் கல்வி கற்ற மாணவர்களுக்கும் மற்றும் அனைத்து மாணவசமூகத்திற்கும்

மெது மனமார்ந்த நன்றிகள்

- குடும்பத்தினர் (7488)


## ஐ.எஸ்.இயக்கத்தை எதிர்கொள்ள மத்திய கிழக்கு அரசுகள் சந்திப்பு

(டோகா)

ஜஎஸ் (இஸ்லாமிய அரசு) தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு எதிராக போராடுவதற்கான மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளின் இராஜதந்திர முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

தமது பதில் நடவடிக்கை குறித்து விவாதிப்பதற்காக, எகிப்து, ஜோர்தான், கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பு ஒன்றை சவுதி அரேபியா கூட்டியுள்ளது.

சிரியாவின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று எகிப்திய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

ஈராக்கிய பிரச்சினையில் முக்கிய பங்காற்றி வருகின்ற ஈரானின் வெளியுறவு அமைச்சரை பாக்தாத்தில் ஈராக்கின் புதிய பிரதமர் ஹைதர் அல் அபாதி சந்திக்கிறார்.

இதனிடையே, சிரியாவின் வடக்கு மாகாணமான ரக்காவில் அரசாங்கத்தின் கட்டுப்பாட் டில் இருந்த கடைசி விமானப்படைத் தளத்தையும் ஐ.எஸ் போராளிகள் கைப்பற்றி விட்டதாக தகவல்கள் வந்துள்ளன.



தாப்கா விமானப்படைத் தளம் முழுமையாக ஐ.எஸ் போராளிகளின் வசம் வீழ்ந்துவிட்டதாகவும் விமானப்படைவீரர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பிரிட்டனிலிருந்து இயங்கும் சிரியாவின் மனித உரிமை நிலைவரத்தைக் கண்காணிக்கும் குழு தெரிவித்துள்ளது.

விமானப்படைத் தளம் வீழ்ந்து விட்டதை சிரியாவின் அரச செய்தி நிறுவ்னம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால், அரசபடைகள் வெற்றிகரமாக மீள ஒருங்கிணைந்து வருவதாகவும் அந்த செய்தி கூறியுள்ளது.

இதனிடையே தரா மாகாணத்தில் அரச படைகள் மறைந்திருந்து நடத்திய அதிரடித்தாக்குதலில் 30-க்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ள தாக சிரியாவின் அரச செய்தி நிறு வனமும் கண்காணிப்புக் குழுவினரும் உறுதிப்படுத்தியுள்ளனர். (செ-6)

## என்னிடம்...

குறிப்பிடுகின்றன.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் புதுடில்லி விஜயம் குறித்து கொழும்பு சீற்றமடைவதற்கு இன்னொரு காரணமும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது பதவியேற்பு விழாவின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தன் பிறகு முக்கியமான இலங்கை அரசாங்க பிரதிநிதிகள் எவரையும் சந்திக்கவில்லை.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை புதுடில்லிக்கு அழைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துள்ளமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் ஏமாற்றம் அடைந்திருப்பதாக கூறப்படுகின்றது. (செ-11)

## உலகின் மோச...

கள் தொடர்பிலான இந்தப் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 13-வது இடத்திலும், படைத்துறச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 25-வது இடத்திலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரா்ஜபக்ஷ 48-வது இடத்திலும் இருக்கின்றனர்.

அதேவேளை, இப்பட்டியலில் சோனியா காந்தி 29-வது இடத்திலும், கருணாநிதி 31-வது இடத்திலும் இடம்பெறறுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## மத அமைப்புகளுடன்...

வேண்டும்.

இவ்வாறு மோதிக் கொள்வதனால் தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகும்.

மத அமைப்புக்களுடன் வேலை செய்யும் போது மிகவும் நிதான மாக செயற்பட வேண்டும், மத அமைபபுக்கள் ஏதேனும் குற்றம் சுமத்தினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

எனினும் அவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவ்சியமில்லை, பதிலளிக்கப் போனால் இந்தப் பிரச்சினை நீண்டு கொண்டே செல்லும்.

பொது பல சேனாவின் குற்றச்சாட்டுக்களை யாரும் பெரிதாக கண்டு கொள்வதில்லை.

அவர்கள் எல்லோரையும் விமரசனம் செய்கின்றார்கள், அவர்களுக்கு பதிலளிக்க முயற்சித்தால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பின் இந்திய...

இந்திய உயர் அதிகாரிகளை சந்தித்து 13-வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்கள், சிங்கள குடியேற்றங்கள் குறித்து அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை.

எனவே இது தொடர்பில் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுககு அறிவிக்கவுள்ளதாகவும் பாராளுமன்றதிலும் விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கோரவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் கூட்டமைப்பின் இந்திய பயணம் தொடர்பாக ஜனாதிபதியிடம் விசனம் தெரிவித்துள்ளது. (செ-11)


SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான

தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-8283)

தொ.பே - 0772931062, 0776217926 www.speedlanka.net



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையின்னை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101 (C-8281)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org